# உதயன்

சுடர் : 36 கதிர் : 295 | புதன்கிழமை | புரட்டாதி 5 ஆம் நாள் 22 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## சாவு 66 தொற்று 1,351

கொழும்பு, செப். 22
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 66 14

- மரணச் சான்றிதழும் வேண்டாம்
- ஓ.எம்.பி. அலுவலகமும் வேண்டாம்
- எந்தவோர் இழப்பீடும் வேண்டாம்

# காணாமல் ஆக்கப்பட்டோரை மீட்டெடுத்து எம்மிடம் தாருங்கள்!

### காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 22

எமக்கு மரணச் சான்றிதழும் வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகமும் வேண்டாம், இழப்பீடும் வேண்டாம். திருப்பித் தருவதாகக்கூறி பொறுப்பேற்ற எம் உறவுகளே எமக்கு வேண்டும். அதற்கான நீதி, இழுத்தடிப்பு இல்லாமல் வழங்கப்படவேண்டும். அதற்கு ஐ.நா. நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு, வடக்கு கிழக்கில் வலிந்து காணாமலாக்கப்பட்டோருடைய உறவினர்களின் சங்கத்தினர் கோரியுள்ளனர். 15



## ஜஸ்ரின் ட்ரூடோ மீண்டும் வெற்றி!

*ஹரி ஆனந்தசங்கரி எம்.பியாகிறார்*

ஒட்டாவா, செப். 22
கனடாவில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி வெற்றிபெற்றுள்ளது. இந்தத் தேர்தலில் லிபரல் கட்சி சார்பில் போட்டியிட்ட ஹரி ஆனந்த சங்கரி மீண்டும் 15

## காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் கொல்லப்பட்டனரா?

### கோத்தாபயவிடம் கேட்கிறார் சுரேஷ்

யாழ்ப்பாணம், செப். 22
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச்சான்றிதழை வழங்க இலங்கை ஜனாதிபதி முன்வந்திருப்பதன் மூலமாக, காணாமலாக்கப்பட்ட அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனரென்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளாரா? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார், முன்னாள் நாடாளு 15

## தமிழர்களை அழிக்கும் சுமந்திரன் எம்.பி. பதவியைத் துறக்கவேண்டும்

*காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்து*

வவுனியா, செப். 22
நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தாது, தமிழர் தரப்பை அழிக்கிறார். தமிழர்களின் எதிரிபோல்செயற்படுகின்றார். எனவே, நிலுவையிலுள்ள இராஜினாமாக் கடிதத்தை முடித்து எங்களைத் தனியாக விட்டுவிடுமாறு சுமந்திரனிடம் கேட்கி 15

## யாழ்ப்பாணத்தில் 66 பேருக்கு நேற்றுத்தொற்று

யாழ்ப்பாணம், செப். 22
யாழ்ப்பாண மாவட்டத்தில் 66 பேருக்கு நேற்று கொரோ 14

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் சாவு

கிளிநொச்சி, செப். 22
அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மின்சாரம் தாக்கியதில் ஒருவர் 15

## சங்கிலி அறுத்தவர் துரத்திப் பிடிப்பு

வவுனியா, செப். 22
வவுனியாவில் வீதியால் சென்ற பெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு 14

## அடுத்த மாதத்திலிருந்து மூன்றாவது தடுப்பூசி

*முற்பதிவு செய்துள்ள அரசு*

கொழும்பு, செப். 22
நாட்டுமக்களுக்கு மூன்றாவது தடுப்பூசியை வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்கான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக முற்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.
அதற்காக தேவைப்படும் 14 மில்லியன் பைஸர் தடுப்பூசிகளைப் 15

## போர்க்குற்ற மீறல், கொலைகளுக்கு புலிகளையே விசாரிக்கவேண்டுமாம்

### கூறுகின்றார் எஸ்.பி.திசாநாயக்க

கொழும்பு, செப். 22
"இறுதிக்கட்டப் போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல், படுகொலைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே பொறுப்புகூற வேண்டும்."
இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர், அமெரிக்காவின் 15



## கொலையாளிகளான நீங்களே கொலைகளை விசாரிக்கலாமா?

*சிறீதரன் எம்.பி. சபையில் காரசாரமாகக் கேள்வி*

கொழும்பு, செப். 22
காணாமல்போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதாக ஜனாதிபதி கோத்தாபய ரா்ஜபக்ச ஐ.நா. செயலரிடம் கூறியதன் மூலம் ஓமந்தையில் வைத்து கண்கண்ட சாட்சிகளுடன் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள், இந்த நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்றா ஐ.நா.வில் கூறுகின்றார்? உள்ளக விசாரணை என்ற பெயரில் கொலையாளியேதான் செய்த கொலைகளை விசாரிப்பதுதான் இந்த உலகின் நீதியா? எனக் கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசியக்கூட்ட மைப் 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# விதை இறக்குமதியையும் குறைப்பதற்கு அரசு முடிவு

**கொழும்பு, செப். 22**

**விவசாய நடவடிக்கைக்குத் தேவையான விதைகளை இலங்கையிலேயே உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அடுத்த வருடம் முற்பகுதியில் விதைகள் இறக்குமதியை 50 வீதத்தால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**



இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கைக்குள்ளேயே பல வகையான விதைகளை உற்பத்தி செய்ய முடியும். எனினும், இறக்குமதி பொருளாதாரத்துக்கு பழக்கப்பட்டுள்ளதால் விதைகள் இறக்குமதிக்கு மட்டும் வருடாந்தம் 2 பில்லியன் ரூபா செலவளிக்கப்படுகின்றது.

எனவே, விதைகளை மட்டுமல்ல இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து வகையான உணவுப் பொருள்களையும் இங்கேயே உற்பத்தி செய்வதுதான் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு திட்டமாகும்.

முதற்கட்டமாக முதல் மூன்று வருடங்களுக்குள் கிழங்கு, பெரிய வெங்காயம் மற்றும் மிளகாயை இலங்கைக்குள்ளேயே உற்பத்தி செய்வதுதான் எமது திட்டமாகும்.

குறிப்பாக ஒரு வருடத்துக்குள் மிளகாய் இறக்குமதி தடுக்கப்படும். தம்புள்ளை பகுதியில் வெங்காயத்துக்கான விதையும், நுவரெலியாவில் கிழங்குக்கான விதையும் உற்பத்தி செய்யப்படும். இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்து விதைகளும் உற்பத்தி செய்யப்படும். அடுத்த வருட முற்பகுதியில் விதை இறக்குமதி 50 வீதத்தால் குறைக்கப்படும், என்றார். (ஒ-44)



## பஸிலுக்காக பதவி துறந்தவர் கப்ராலால் உள்ளே வந்தார்

கொழும்பு, செப். 22

சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரான ஜயந்த கெட்டகொட, நாடாளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று மீண்டும் பதவியேற்றார்.

அதனை அடுத்து அவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க முன்னிலையில் உறுப்பினர்களின் பதிவேட்டில் கையொப்பமிட்டார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. இதன்போதே பதவியேற்பு இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சராக செயற்பட்ட அஜித் நிவாட்கப்ரால், மத்திய வங்கி ஆளுநர் பதவியை ஏற்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்தார். இதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு ஜயந்த கெட்டகொடவின் பெயரை மொட்டுக் கட்சி முன்மொழிந்திருந்தது.

அதேவேளை, நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வருவதற்காக ஜயந்த கெட்டகொட, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை முன்னர் துறந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-44)

## 76,145 பேர் கைது

கொழும்பு, செப்.22

நாட்டில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் இதுவரை 76 ஆயிரத்து 145 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேவேளை நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 509 கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேல் மாகாணத்தில் 13 வீதித்தடைகளில் வாகனங்கள் மறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-4-ரி2)

## கொலையுடன் தொடர்பு 13 இராணுவத்தினர் கைது

கொழும்பு.செப்.22

கிராம அலுவலர் ஒருவரது கணவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், இராணுவத்தைச் சேர்ந்த 13 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். மட்டக்குளி காக்கைதீவுக் கடற்கரையில் கரையொதுங்கிய ஆணொருவரின் சடலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அவரது மனைவி மற்றும் 13 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முகம் துணியால் சுற்றப்பட்டு, கை, கால்கள் கயிற்றால் கட்டப்பட்டிருந்த நிலையில் சடலம் கரையொதுங்கியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசேட விசாரணைகளில், மட்டக்குளிப் பிரதேசத்தின் கிராம சேவகரான பெண்ணொருவரும், மட்டக்குளி இராணுவ முகாமில் கடமையாற்றிய, புலனாய்வுப் பிரிவின் கோப்ரல் உள்ளிட்ட 13 இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை தற்போது தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ள நீதிமன்று அனுமதி வழங்கியுள்ளது. (ஒ-4)

## முட்டாள்களால் அரசு பலவீனம்

*அமைச்சர்களை சாடுகின்றார் சரத் வீரசேகர*

கொழும்பு,செப். 22



அரசில் உள்ள ஒரு சில அமைச்சர்களின் முட்டாள்த்தனமான செயற்பாடுகளால் அரசு பலவீனமடைந்துள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது அமைச்சர் சரத் வீரசேகர தொடர்பில் குற்றஞ்சாட்டினார். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளித்துள்ள பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர,

ஜகத் குமார சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. பாதுக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கு அமையவே பொலிஸ்மா அதிபரால் அவருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இதற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

பாதுக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக தனக்கு நெருக்கமானவர் ஒருவரை நியமிக்குமாறு ஜகத் குமார என்னிடம் உத்தியோக பூர்வமாக கோரிக்கை விடுத்தார்.

பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கு அமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை நியமிக்கும் அதிகாரம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செய லாளருக்கு உண்டு என்று அரச சேவைகள் ஆணைக்குழு தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. பாதுக்க பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி விவகாரத்தில் எவ்வித அரசியல் தலையீடும் கிடையாது. அரசியல் அழுத்தத்தை ஜகத் குமாரவே பிரயோகித்தார். இவருக்கு ஆதரவான வரை நியமிக்காததன் காரணமாக பொய்யுரைக்கின்றார்.

ஆகவே இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுக்குமாறு பொதுஜன பெரமுனவிடம் உத்தியோக பூர்வமாக வலியுறுத்தியுள்ளேன்.
- என்றார். (ஒ-4)



## மாணவர்களுக்கான தடுப்பூசித் திட்டத்தில் உயர்தர மாணவர்களுக்கு முன்னுரிமை!

கொழும்பு, செப். 22

மாணவர்களுக்கான தடுப்பூசித் திட்டத்தில் உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். அவர்களுக்கு பைஸர் தடுப்பூசியே ஏற்றப்படும் என்று கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

ஆரம்பத்திலேயே சபையின் கவனத்தை ஈர்த்த ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு பாடத்திட்டத்தை நிறைவுசெய்யமுடியாமல் உள்ளது. எனவே, அவர்களுக்கான நிவாரணத் திட்டம் பற்றி ஆராயப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, இது தொடர்பில் விரிவானதொரு விளக்கத்தை எதிர்காலத்தில் வழங்குவேன். பரீட்சைகள் ஆணையாளருடன் அது பற்றி கலந்துரையாடப்பட்டுவருகின்றது.' என்றார்.

இதனையடுத்து எழுந்த சம்பிக்க ரணவக்க, உயர்தர மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசியே ஏற்றப்பட வேண்டும் என சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர், இது தொடர்பில் ஜனாதிபதி கடந்த வாரமே கட்டளையொன்றை பிறப்பித்துள்ளார். இதன்பிரகாரம் சுகாதார மற்றும் கல்வி அமைச்சுகள் பேச்சுகளை ஆரம்பித்துள்ளன. முதலாவதாக உயர்தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றப்படும். இதற்கான வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது - என்றார். (ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசுக்கட்சி எதிர்ப்புக் காட்டினும் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்போம்

## ரெலோ மத்தியகுழுக் கூட்டத்தில் முடிவு

**யாழ்ப்பாணம், செப்.22**

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஒத்துழைக்காவிட்டாலும், தமிழ்க் கட்சி களை ஒன்றிணைக்கும் முயற்சிகளைத் தொடர்வது என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மத்திய குழு முடிவெடுத்துள்ளது.**

கடந்த சனிக்கிழமை ரெலோவின் மத்திய குழு கூடியது. சூம் தொழில் நுட்பம் ஊடாக இந்தக் கூட்டம் நடை பெற்றது. கட்சி தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியுள்ளார்.

கூட்டத்தில் தற்போதைய அரசியல் கள நிலைவரம் தொடர்பாக ஆராயப் பட்டுள்ளது. கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எம்.ஏ.சுமந்திரன், சாணக்கியன், சி.சிறீதரன் போன்ற வர்கள் தேவையற்றுச் சீண்டுகின்ற னர் என்று சுட்டிக்காட்டினர் என அறிய முடிகின்றது. கூட்டமைப்பின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு இதுவரை அமைதியாக இருந்தது போதும் என்றும், இனிமேல் உடனுக் குடன் அவர்களுக்கு உரிய பதிலடி கள் கொடுக்க வேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பெரும் பான்மையினர் கருத்துத் தெரிவித் துள்ளனர். இவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் நட வடிக்கைகயில் ஈடுபட்டுள்ளனர் என் றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜெனிவாவுக்கு அனுப்பிய கடித விவ காரம் விவாதிக்கப்பட்டது. தமிழ் தேசிய நிலைப்பாடுடைய கட்சிகளு டன் இணைந்த கடிதம் அனுப்பி யதை பாராட்டிய மத்தியகுழு, அந்த நடவடிக்கைக்கு அங்கீகாரம ளித்தது.

அரசுடன் பேச்சு என இலங்கை தமிழ் அரசுக் கட்சி முயற்சிகளை ஆரம்பித் தாலும், நிபந்தனையற்ற பேச்சுக்கு ரெலோ செல்லக்கூடாது என்றும், அரசியல் கைதிகள் விடுதலை உள் ளிட்ட சில முன்நிபந்தனைகளை அரசு நிறைவேற்றுவதை உறுதி செய்ய வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட் டுள்ளது என்று அந்தக் கட்சி வட்டா ரங்கள் தெரிவித்தன. (எ-இ)




# பி.சி.ஆர். பரிசோதனை செய்யாது உறவினரிடம் உடல் ஒப்படைப்பு!

## வவுனியாவில் மக்கள் அதிருப்தி

வவுனியா, செப்.22

வவுனியா மருத்துவமனையில் ஒப்படைக்க சடலம் ஒன்று, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படாது மீண்டும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும், தனிநபர்களுக்கு உள்ள செல்வாக்குக் கார ணமாக வழமையான செயற்பாடுகளில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன என்றும் பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

உயிரிழப்பவர்களின் சடலங்கள் மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு, பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட் படுத்தும் நடைமுறை தற்போது பின்பற்றப்பட்டு வரு கின்றது.

வவுனியா, பட்டாணிச்சூரில் வசித்த பெண் ஒருவர் கட ந்த சனிக்கிழமை உயிரிழந்தார். அவரது உடலை மருத்துவமனையில் ஒப்படைப்பதற்காக சுகாதாரப் பிரிவினர் வாகனம் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் அந்த வாகனத்தைத் திருப்பி அனுப்பிய உறவினர் கள், வவுனியா நோயாளர் காவு வண்டிமூலம் சட லத்தை வவுனியா மருத்துவமனைக்கு அனுப்பினர் என்று கூறப்படுகின்றது.

வவுனியா மருததுவமனையில் ஒப்படைக்கப்பட்ட சட லம், வழமையாக மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை இன்றி சடலம் மீண்டும் உறவினர்களி டம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் குற்றஞ்சாட்டப்படு கின்றது.

மருத்துவமனையில் உள்ள அதிகாரிகளின் செல்வாக் குக் காரணமாகவே இவ்வாறு நடந்துள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள பொதுமக்கள், அதிகார பலமற்ற சாதாரண மக்களே அனைத்து விடயங்களி லும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர் என்றும் தெரி வித்துள்ளனர். (எ-18)

# மஸ்தானின் இணைப்பாளர் கொரோனாவால் உயிரிழப்பு

வவுனியா, செப்.22

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.எம்.மஸ்தானின் இணைப்பாளர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

வவுனியா, பட்டாணிச்சூரைச் சேர்ந்த சலாஹீதீன் ஹாஜி (சாபு) என்பவரே உயிரிழந்தவராவார்.

கொரோனாத் தொற்று உறுதி செய் யப்பட்டிருந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக வவுனியா வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், சிகிச்சை பயனின்றி நேற்று அதி காலை உயிரிழந்துள்ளார்.

அவரது உடல் அடக்கத்துக்காக ஓட்டமாவடிக்கு எடுத்துச் செல்லப் பட்டுள்ளது என்று சுகாதாரப் பிரிவி னர் தெரிவித்தனர். (எ-17)

# கொரோனாவால் இறந்தவரின் சடலத்தை உறவினர்களிடம் கையளித்த விவகாரம்

*குற்றம் கண்டறியப்பட்டால் கடுமையான நடவடிக்கை!*
*கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, செப். 22

கிளிநொச்சியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் சடலத்தை அவருடைய வீட்டுக்கு முன்பாகக் கொண்டுபோய் வைத்து அஞ்சலி செலுத்திய விவகாரத்தில், அதிகாரிகளிடத்தில் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித் தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், இது தொடர்பில் வினவியபோதே மாவட்டச் செயலர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் சடலத்தை எடுத்துச் செல்லவோ கையாளவோ சுகாதாரத் தரப்பைத் தவிர்ந்த வேறு எவருக்கும் அனுமதியில்லை. அவ்வாறு இந்த விவகாரத்தில் எந்த முறைப்பாடும் கிடைக்கவில்லை. அதிகாரிகளின் தவறு இதில் இருந்தால், முறைப்பாடு கிடைக்கும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்- என்றார். (ம-6)



# அனுமதிப்பத்திரம் இல்லாமல் மணல் ஏற்றிய 3 பேர் கைது

கிளிநொச்சி, செப். 22

பளை மற்றும் முகாமாலைப் பகுதிகளில் அனு மதிப் பத்திரம் இல்லாமல் மணல் ஏற்றிய மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மணல் ஏற்றுவதற்குப் பயன்படுத்திய வாகனங் களும் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளன.

பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சங்கத்தார் வயல் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இருவர் கைது செய்யப்பட்டனர். மணல் கடத்தலுக்கு அவர்கள் பயன்படுத்திய உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டன.

அதேபோல் முகமாலைப் பகுதியில் மணல் ஏற் றிய ஒருவர் இராணுவத்தினரால் கைது செய் யப்பட்டுள்ளார். அவர் டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றியுள்ளார். டிப்பர் வாகனமும் நீதி மன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளது. (ம-6)

# வவுனியாவில் அறுவர் கொரோனாவுக்கு பலி

## மேலும் 35 பேருக்குத் தொற்று

வவுனியா, செப்.22

வவுனியாவில் மேலும் 35 பேருக்கு நேற்று தொற்று உறுதியாகியுள்ளது. அதேவேளை நேற்றுமுன்தினம் 21 வயதுப் பெண் உட்பட 6 பேர் கொரோனாத் தொற் றால் உயிரிழந்துள்ளனர்.

இனங்காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்புக ளைப் பேணியோர், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர், எழுமாற்றாகத் தெரிந்தெடுக்கப்பட்டோருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனைகளின் ஒரு தொகுதி முடிவுகள் நேற்று வெளியாகின.

வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 35 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் வவுனியாவில் 6 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிந்துள்ளனர்.

அட்டமஸ்கடவைச் சேர்ந்த 21 வயதுப் பெண் ஒருவரும், தேக்கவத்தையைச் சேர்ந்த 55 வயதான நகர சபை உறுப்பினர் ஒருவரும், பம்பைமடுவில் உள்ள காப்ப கத்தைச் சேர்ந்த 78 வயது ஆண் ஒருவரும், குருமன் காட்டைச் சேர்ந்த 75 வயது பெண் ஒருவரும், பட்டா ணிச்சூரைச் சேர்ந்த 65 வயது ஆண் ஒருவரும், ஆர். டி.எஸ். விடுதியிலிருந்த 92 வயது ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். (எ-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தக நிலையங்களை தற்போது திறக்க அனுமதிக்க முடியாது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு



**கொழும்பு,செப்.22**

**நாட்டிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களையும் தற்போது மீண்டும் திறக்க அனுமதிக்க முடியாது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

பொறுமையாக இருப்பது மற்றும் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது நன்மைகளைப் பெற உதவும் என்று சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளரான மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்தாண்டு உருவான கொரோனா அலையால் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டவில்லை, சமீபத்திய அலை பெரியளவு தொற்றாளர்களின் எண்ணிக்கைக்கு வழிவகுத்தது. அத்துடன் இது தற்போது ஆயிரத்து 700 ஆக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சு நாட்டை மீண்டும் திறந்து மூட விரும்பவில்லை. முடிவெடுப்பதில் கடந்த தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கிடையில் நாட்டில் மதுபானக் கடைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கு யார் பொறுப்பு என்பது குறித்து கருத்து தெரிவிக்க முடியாது - என்றார். (ஐ-இ)

# திலீபனின் கோரிக்கைகள் நிறைவேற தமிழ்த் தலைமைகளும் இடையூறு

## அருட்தந்தை சக்திவேல் அதிருப்தி

வவுனியா, செப். 22

'அரசியல் கைதிகளின் விடுதலை என்பது கானல் நீரே. தமிழ்த் தலைமைகளும் ஆட்சியாளர் பக்கமே நிற்கின்றனர். தியாகி திலீபனின் கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படவில்லை' என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளுடைய விடுதலை தொடர்பாக வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மட்டுமல்ல, முழு உலகுக்கும் அகிம்சையை உணவுத் தவிர்ப்பால் போதித்து உயிர்த்தீபமாய் திகழும் தியாகி திலீபனின் உயிர்த் தியாக 34ஆம் அகவையிது. புத்தன், கிறிஸ்து, நபியின் வாழ்வுப் போதனைகளையும், சமயங்களின் அடிப்படைத் தத்துவமான மனித மாண்பையும் கொலை செய்த கொடுங்கோன்மை, பெரும்பான்மை இன மத ஆட்சியாளர்களே திலீபனின் உணவுத் தவிர்ப்பை அவமதித்ததோடு அவரது கோரிக்கையையும் நிறைவேற்றத் தவறினர்.

சிறைச்சாலைகளிலும், இராணுவ முகாம்களிலும் அடைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படல் வேண்டும், அவசர கால சட்டத்தை நீக்க வேண்டும் எனும் கோரிக்கைகள் உட்பட முன் வைத்த ஐந்து கோரிக்கைகளை இலங்கை ஆட்சியாளர்கள் மிக இலகுவில் நிறைவேற்றி இருக்க முடியும். அதனை செய்யத் தவறியமைக்கு முக்கிய காரணம் பௌத்தநாடு என்று கூறும் இலங்கை ஆட்சியாளர்கள் புத்தனை கொன்று 'சிங்கள புத்தனை' சிங்கக் கொடியில் உயர்த்தி நின்றமையாகும். அதுவே இன்றும் தொடர்கிறது.

அதுமட்டுமல்ல தமிழ் அரசியல் கைதிகளை அரசியல் கைதிகளாக ஏற்காது, தமிழரின் தாயக கோட்பாட்டுக்கும், சுயநிர்ணய உரிமை அரசியல் செயல்பாட்டுக்கும் வாழ்நாள் தண்டனை கொடுப்பதே பேரினவாத ஆட்சியாளர்களின் நோக்கமாகும். இதன் மூலம் அடுத்த இளம் தலைமுறையினரை அத்தகைய அரசியல் சிந்தனையில் இருந்து நீக்கம் செய்வதே அடுத்த இலக்காகும். இதற்காக அரசியல் கைதிகளை விடுதலை செய்யாதது மட்டுமல்ல, இதற்காகவே பயங்கரவாத தடைச் சட்டத்தினை இன்றும் இறுக்கமாகப் பற்றிப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இதுவே இந்திய மற்றும் மேற்கத்திய நாடுகளில் அரசியல் தேவையாகவும் இருக்கின்றது. அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து விடுவிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அது அங்கீகாரமாக அமைந்துவிடும் எனவும் நினைக்கின்றனர். இதனையே இவர்களுக்கு கைக்கூலிகளாக செயற்படும் ஒரு சில தமிழ் அரசியல் தலைமைத்துவங்களும் பின்பற்றுகின்றனர்.

தேர்தல் காலங்களில் பொதுஇடங்களிலும், தேர்தல் பிரசார மேடைகளிலும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படல் வேண்டும் என தேர்தல் வாக்கு அரசியலை நடத்தி மக்களின் வாக்குகளை கொள்ளையடித்துவிட்டு அதிகாரத்துக்கு வந்தபின்னர் அமைதி காப்பதே இவர்களின் அரசியல் நாகரீகமாக உள்ளது என்பதையும் நாம் அவதானிக்கலாம்.

இது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைமைத்துவத்தோடு எனக்கு நேரடி அனுபவம் உள்ளது. நல்லாட்சி முகம் கொண்ட மைத்திரி ரணில் ஆட்சிக்காலத்தில் அரசியல் கைதிகளுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அனேகம். தங்கள் விடுதலைக்காக உணவுத் தவிர்ப்பு, சாகும் வரையான உணவுத் தவிர்ப்பு எனத் தொடர்ந்த போதெல்லாம் இவர்கள் சிறைச்சாலைக்கு சென்று கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியமை இதற்கு நல்ல சான்றாகும். அன்று மீண்டும் ரணிலை பிரதமர் பதவிக்கு அமர்த்துவதற்கு அரசியல் கைதிகளின் விடுதலையையும் பத்து கோரிக்கைகளில் ஒன்றாக வைத்திருப்பதாக என்னிடம் கூறினார் தலைவர் சம்பந்தன். ஆனால் ஒரு அரசியல் கைதியையும் இவர்களின் அரசியல் சாணக்கியத்தால் விடுதலை செய்ய இயலவில்லை என்பதைவிட விடுதலை செய்யும் நோக்கம் அவர்களுக்கு இருக்கவில்லை என்றே கூறலாம்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பேன் என்று மைத்திரி தெரிவித்தார். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரணில் ஆதரவு கொள்கையால் அதுவும் நிகழவில்லை. அதுவும்கூட மைத்திரியின் தனிப்பட்ட அரசியல் ஏமாற்று வார்த்தைகளே. அவருடைய ஆட்சிக் காலத்திலேயே நீதி அமைச்சராக இருந்த விஜயதாச ராஜபக்ச அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை இருப்பது பயங்கரவாதிகளே என்றார். இதனையே மைத்திரியும் தொடர்ந்து உச்சரிக்க தொடங்கினார். இதுவே பேரினவாத அரசியல்.

இத்தகைய கொள்கை உள்ள அரசியல் தலைமைத்துவங்கள் திலீபனுக்கு ஏற்றுகின்ற தீபம் இறைவனின் கொள்கைக்கும், உணவுத் தவிர்ப்புக்குப் பின்னால் உள்ள கோரிக்கைகளுக்கும் வைக்கின்ற தீயாகவே கொள்ளல் வேண்டும். இது முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையுடனான இன அழிப்பை விட பயங்கரமானது - என்றார். (ம-110)



# 20 வயதானோருக்கு தடுப்பூசி மன்னாரிலும் நேற்று ஆரம்பம்

மன்னார்,செப்.22

மன்னார் மாவட்டத்தில் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளில், முதல் கட்டம், மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில், சுகாதார மருத்துவ அதிகாரிகள்,பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்,சுகாதார ஊழியர்கள் மற்றும் இராணுவத்தினரின் உதவியுடன் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன.

இன்று புதன்கிழமை எழுத்தூர் அன்னை திரேசா அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலும், மறுநாள் வியாழக்கிழமை உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மற்றும், மன்னார் புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையிலும், எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மன்னார் கரிசல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மற்றும் தலைமன்னார் கட்டுக்காரன் குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையிலும், எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலையிலும் தடுப்பூசி செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-56)



# 20 தொடக்கம் 30 வயதினருக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகள் வவுனியாவில் நேற்று ஆரம்பம்

வவுனியா,செப்.22

வவுனியாவில் 20 தொடக்கம் 30 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஐந்து தடுப்பூசி செலுத்தும் நிலையங்கள் அமைக்கப்பட்டு தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அந்த வகையில் மரைக்காரம்பளை கிராம அலுவலர் பிரிவில் உள்ளவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு கணேசபுரம் விநாயகர் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

குறித்த தடுப்பூசி செலுத்தும் செயற்பாட்டில் இளையோர் சமூக இடைவெளிகளை பேணி சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தங்களுக்கான தடுப்பூசியை ஆர்வமாக பெற்றுகொண்டனர். (ஐ-110)

# சாவகச்சேரி நகரசபைக்கு புதிய உறுப்பினர்

சாவகச்சேரி,செப்.22

சாவகச்சேரி நகர சபையின் புதிய உறுப்பினராக வீரசிங்கம் விஜயேந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

உறுப்பினர் ப. ஜெயகாந்தன் பதவி விலகியதையடுத்து, அவரது வெற்றிடத்துக்கு புதியவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இன்று புதன்கிழமை நடைபெறும் மாதாந்த அமர்வில் உறுப்பினராகப் பதவியேற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சின் தன்னிச்சையான முடிவே அனைத்து அலைகளுக்கும் வழிவகுத்துள்ளது

## சுகாதார நிபுணர்களின் சங்கம் தெரிவிப்பு

**கொழும்பு, செப்.22**

**சுகாதார அமைச்சின் தன்னிச்சையான முடிவுகளே நாட்டிலுள்ள அனைத்து கொவிட்-19 அலைகளுக்கும் வழிவகுத்துள்ளது என்று சுகாதார நிபுணர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.**

சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

நாளாந்தம் முன்னெடுக்கப்படும் பி.சி.ஆர். சோதனைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளமை, அண்மையில் தெரிவிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவதற்கு ஒரு காரணி ஆகும்

சுகாதார அமைச்சு தேவையில்லாமல் பி.சி.ஆர் சோதனைகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளது. இது தொற்றாளர்கள் குறைவதற்கு ஒரு முக்கிய காரணம்.

கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டபோது, அரசாங்கம் மற்றும் சுகாதார அமைச்சின் தன்னிச்சையான முடிவுகள் பிந்தைய கட்டங்களை நோக்கி நாட்டில் மற்றொரு கொரோனா வைரஸ் தொற்றுக்கு வழிவகுத்தது.

பொருத்தமான முடிவுகளை எடுக்கத் தவறினால் நாடு கொவிட்-19 இன் மற்றுமொரு அலையை எதிர்கொள்ள நேரிடும் -என்றுள்ளது. (ஐ-இ)

# திருட முயன்ற சந்தேகத்தில் தொல்புரத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப்.22

ஆட்களற்ற வீடொன்றுக்குள் புகுந்து திருட முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவர் ஊர் மக்களால் பிடிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பம் தொல்புரம் மேற்கு, சுழிபுரம் பத்தாணைக்கேணி ஞான வைரவர் ஆலயத்துக்கு அருகில் நடந்துள்ளது.

அங்குள்ள வீடொன்றில் வசிப்பவர்கள் வேலைக்குச் சென்றிருந்த சமயம், வீட்டின் கதவு ஒன்றை உடைக்க ஒருவர் முயற்சித்தார் என்று கூறப்படுகின்றது.

சத்தம் கேட்டு அயலில் உள்ளவர்கள் சென்றபோது, அந்த நபர் தப்பியோட முயன்றுள்ளார். ஆயினும் அயலவர்கள் அந்த நபரைத் துரத்திச் சென்று பிடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்ததுடன், சந்தேகநபரின் வீடும் பொலிஸாரால் சோதனையிடப்பட்டுள்ளது. அங்கிருந்து ஒரு தொகை நகைகளும், அடைவுச் சிட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

முதற்கட்ட விசாரணைகளில் மூளாயிலுள்ள இருவீடுகளில் திருடியதைச் சந்தேகநபர் ஒப்புக்கொண்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார், சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ-125)

# ஊரடங்கு வேளையில் வீடுடைத்து திருட்டு!

வட்டுக்கோட்டை, செப்.22

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்து பெறுமதியான நகைகள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

வீட்டில் உள்ளவர்கள் உறவினர்கள் வீட்டுக்குச் சென்றுள்ள நிலையில், வீட்டின் கூரை பிரிக்கப்பட்டு அங்கிருந்த 3 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)




# சுமார் எட்டு அங்குலம் நீளமுள்ள வண்ணத்துப்பூச்சி கண்டுபிடிப்பு

சுமா ெட்டு அங்குலம் நீளமுள்ள மிக அரிதான வண்ணத்துப்பூச்சி ஒன்று பதுளை மாவட்டம் ஹாலிஎல பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அப் பகுதியில் உள்ள தோட்டத்தில் நின்ற மரத்தடியின் கீழ் குறித்த வண்ணத்துப்பூச்சி மறைந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

'லூனா' என்று அழைக்கப்படும் இந்த வண்ணத்துப்பூச்சி இலங்கையில் மிகவும் அரிதான இனமாக காணப்படுகிறது. மேலும் இது ஒரு பெண் பூச்சி என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். இந்த 'லூனா' வண்ணத்துப்பூச்சி கண்டுபிடிக்கப்பட்டபோது கர்ப்பமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)




# வீராங்கனைகள் கௌரவிப்பு

கிளிநொச்சி, செப்.22

இலங்கை தேசிய கபடி அணிக்கு தெரிவு செய்யப்பட்ட வீராங்கனைகள் மற்றும் பயிற்றுவிப்பாளர் ஆகியோர் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.

றோட்டறிக் கழக உறுப்பினர் எஸ்.கே.நாதனின் நிதி அனுசரணையில் கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத் தலைவர் ஜெயசுந்தர தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

முதல் கட்டமாக வீராங்கனைகளுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

அத்துடன் குறித்த வீராங்கனைகளுக்கு ஒரு வருடத்துக்குரிய சத்துணவை வழங்கும் ஏற்பாட்டை கழகம் ஊடாக யாழ் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் சத்தியமூர்த்தி முன்னெடுத்தார். (ஐ -214)

# கொரோனாவை விட ஆபத்தான வைரஸ் கோத்தா அரசு

## எதிர்க்கட்சி சாடல்

கொழும்பு, செப்.22

கொரோனா வைரஸை விட, ஆணவத்துடன் தொடர்ந்து செயற்படும் அரசே மோசமான வைரஸ் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்துள்ளார்.

கொழும்பு எதுல்கோட்டையில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா வைரஸ் நாட்டுக்குள் நுழையாமல் நாட்டை மூடுமாறு நாங்கள் அரசிடம் கேட்டபோது, நாட்டை மூட வேண்டிய அவசியம் இல்லை என்றனர். வைரஸ் பரவாமல் பாதுகாக்க முகக்கவசங்கள் இறக்குமதி செய்யப்பட்டனவா என்று கேட்டபோது, அது தேவையில்லை என்றனர். தடுப்பூசியைக் கொண்டு வரும்படி கேட்டபோது அத்தகைய தேவை ஒன்று இல்லை என்றனர்.

மந்திரப் பானைகள் ஆறுகளில் வீசப்பட்டன. இப்போது பாணி தயாரித்த நபருக்கும் கொரோனா தொற்றியுள்ளது.

அரச வைரஸ் மிகவும் வலுவானது. கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்.

இன்னும் பலருக்கு தடுப்பூசி போடப்படவில்லை. அரசு தடுப்பூசியை சரியான நேரத்தில் கொண்டு வராத காரணத்தால், அவர்களுக்கு தடுப்பூசி கிடைக்கவில்லை. மக்களுக்கு வைரஸாக இருக்கும் இந்த அரசே இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும்.

கொரோனா வைரஸால் இறந்தவர்களில் அதிகளவானோர் மூன்றாவது அலையிலிருந்தே இறந்தனர். முதல் அலை, மற்றும் இரண்டாவது அலைகளின் போது இது போன்ற சூழ்நிலையை ஏற்படுத்தவில்லை.

நாட்டை மூடுவதற்கு சுகாதாரத் துறை அழைப்பு விடுத்தபோது, மக்கள் நாடு முழுவதும் சென்று இறப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

விசேட மருத்துவ நிபுணர்களின் கருத்துப்படி நாட்டை மூட வேண்டும் என்று எதிர்க்கட்சியாகிய நாங்கள் அழைப்பு விடுத்தோம்.

ஆனால் மக்கள் துரோக மற்றும் ஆணவத்தின் காரணமாக யாரும் சொல்வதை அரசு கேட்கவில்லை.

உண்மையான முடக்கம் பிறப்பிக்கப்பட்டிருந்தால் இறப்பு எண்ணிக்கையை இதைவிடவும் குறைத்திருக்கலாம். ஆணவத்துடன் தொடர்ந்து செயற்படும் அரசே ஒரு வைரஸாகும். -என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## 148 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதி

கொடிகாமம், செப்.22
நற்குண முன்னேற்ற அமைப்பால், பொருண்மியம் நலிந்த 148 குடும்பங்களுக்கு, தலா 2 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன
மந்துவில் கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தாவளை, இயற்றாலை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இவை வழங்கப்பட்டன.
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் கு.குகானந்தனின் ஏற்பாட்டில் பொருள்கள் வழங்கப்பட்டன.
(ஒ-4-159)

## டொலர் பற்றாக்குறை;
# பொருள்கள், எரிவாயு விநியோகம் பாதிப்பு

**கொழும்பு, செப்.22**
**இலங்கையில் கையிருப்பிலுள்ள டொலர் பற்றாக்குறை காரணமாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் எரிவாயு விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது**

என்று இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
உலக சந்தையில் எரிவாயு விலையுடன், ரூபாவின் மதிப்பு வீழ்ச்சியடைந்தமையானது இலங்கையில் எரிவாயு பற்றாக்குறைக்கு காரணம் என்று லாப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.
அத்தியாவசிய பொருள்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி அத்தியாவசிய உணவுப் பொருள்களின் தட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியின் பின்னர் இந்த நிலைமை முடிவுக்கு வரும் என்று மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார். (ஐ-இ)

## நகர சபை உறுப்பினர் கொரோனாவால் சாவு

வவுனியா, செப்.22
வவுனியா நகர சபை உறுப்பினர் தர்மதாச புஞ்சிகுமாரி கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளார்.
திடீர் சுகவீனம் காரணமாக கடந்த வாரம் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.
அதையடுத்து வவுனியா வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.
இவர் கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பாகப் போட்டியிட்டு வெற்றிபெற்றவராவார். (எ-18)

## கைதிகளின் எதிர்ப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுப்பு

கொழும்பு, செப்.22
வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகள் சிலர் ஆரம்பித்த எதிர்ப்பு நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தண்டனைக் காலத்தை குறைக்குமாறு கோரி சுமார் 10 கைதிகள் சிறைச்சாலைக் கூரை மீதேறி எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.
எவ்வாறாயினும், கைதிகளின் கோரிக்கைக்கு சாதகமான தீர்வை வழங்க எமது திணைக்களத்தால் முடியாது.
அவர்களின் கோரிக்கைகள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
(ஐ-இ)

## கிளிநொச்சியில் தொற்று 6,250இனைத் தாண்டியது

*மாவட்டச் செயலர் தகவல்*

கிளிநொச்சி, செப். 22
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை ஆறாயிரத்து 256 பேர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர். அவர்களில் 73 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 256 பேர் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளனர். இதில் தற்போது 537 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் இதுவரை 73 இறப்புக்கள் பதிவாகியுள்ளன.
தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முதலாவது தடுப்பூசியை 61 ஆயிரத்து 894 பேர் பெற்றுள்ளனர். இரண்டு தடுப்பூசிகளையும் 43 ஆயிரத்து 507 பேர் பெற்றுள்ளனர். அதே நேரம் 20 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படடு வருகின்றன - என்றார். (ம)

## வவுனியாவில் 20 நாள்களில் 2,222 பேருக்குக் கொரோனா

*106 பேர் மரணம்*



வவுனியா, செப். 22
வவுனியா மாவட்டத்தில் இந்த மாதம் 20ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 222 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 106 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்று வீதம் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது.
குறிப்பாக செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 20ஆம் திகதி வரை 2 ஆயிரத்து 222 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், 106 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
நாட்டில் ஏற்படும் மரண வீதத்தில் வவுனியாவில் மரணிப்போரின் தொகை பெரியளவில் காணப்படுகின்றது.
வவுனியாவில் உள்ள மக்களின் அசமந்தமான செயற்பாட்டால் இறப்புத் தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது. எனினும் மக்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பெரும் ஆபத்தான நிலையாகும். ஆகவே, வவுனியா மாவட்டத்தின் நிலை தொடர்பில் மக்கள் சிந்தித்து சுகாதார நடைமுறைகளை இறுகப் பின்பற்றி செயற்பட வேண்டும் என்றனர். (ம-110)



## வீட்டில் மது விற்பனை பளையில் ஒருவர் கைது

கிளிநொச்சி, செப்.22
மதுபானத்தை வீட்டில் வைத்து விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையின் கீழ், உதவிப் பொலிஸ் பரிசோதகர் தேசப்பிரியவின் தலைமையின் கீழ் நேற்று முன்தினம் பளைப் பகுதியில் விசேட சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.
இதன் போது வீடொன்றிலிருந்து 56 கால் போத்தல் சாரயப்போத்தல்கள், 11 பியர் ரின்கள் மீட்கப்பட்டன.
அவற்றை விற்பனைக்கு வைத்திருந்த நபரும் கைது செய்யப்பட்டார்.
சந்தேகநபர் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக பளைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.
(ஒ-4-6)

## அபிவிருத்திப் பணி இடம்பெறும் வீதிகளில்
# பாதுகாப்பு விளக்குகளை உடனடியாக நிறுவுங்கள்

*அமைச்சர் ஜோன்சன் அறிவுறுத்தல்*



கொழும்பு, செப். 22
வீதி அபிவிருத்திப் பணிகள் நடைபெறும் இடங்களில் பொது மக்களின் பாதுகாப்புக்காக வீதி சமிக்ஞைகள், பாதுகாப்பு விளக்குகள், எச்சரிக்கை விளக்குகள் போன்றவற்றை உடனடியாக நிறுவுமாறு நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறிவுறுத்தியுள்ளார்.
துறைசார் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில், வீதி அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக நான் கண்காணிப்புச் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு வருகின்றேன். ஆபத்தான இடங்கள் தொடர்பாக சரியான எச்சரிக்கை சமிக்ஞைகள் சில இடங்களில் முறையாக நிறுவப்படவில்லை. அத்தோடு வேகத்தடைகள் கூட அமைக்கப்படவில்லை. வீதி அபிவிருத்தி மேற்கொள்ளப்படும் இடங்களில் பொதுமக்களின் பாதுகாப்புக்கான எச்சரிக்கை சமிக்ஞைகள் மற்றும் வீதி சமிக்ஞைகளை ஒரு வாரத்துக்குள் உடனடியாக அமையுங்கள் -என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நம்பிக்கையிழப்பு

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்குச் சென்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, ஐ.நா. பொதுச் செயலர் முன்னிலையில் உள்ளகப் பொறிமுறையின் ஊடான பொறுப்புக்கூறல் செயன்முறை பற்றி பிரஸ்தாபித்திருக்கின்றார். இலங்கை அரசு அல்லது ஆட்சியாளர்கள் இன்னமும் மாறவில்லை அல்லது மாறப்போவதில்லை.

2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போர் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கைக்கு வந்த ஐ.நா. பொதுச் செயலர் பான் கீமூன், ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்சவுடன் இணைந்து விடுத்த கூட்டறிக்கையில் இலங்கை ஓர் நம்பகமான உள்ளகப் பொறிமுறைக்கு இணங்கியிருந்தது. ஆனால் 12 ஆண்டுகள் கடந்தும் எந்தவொரு முன்னேற்றமும் இல்லாமல், ஆரம்பித்த அதேயிடத்திலேயே இலங்கை இருக்கின்றது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையில் தமிழர்கள் நம்பிக்கை கொள்வதற்குத் தயாரில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக இருந்த சயிட் அல் ஹூசைன், 2015ஆம் ஆண்டு பாதிக்கப்பட்ட தரப்பினர் விரும்பும் பொறிமுறை ஊடாகப் பொறுப்புக்கூறல் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியிருந்தார். பாதிக்கப்பட்ட தரப்பான தமிழ் மக்கள் சர்வதேச நீதிமன்றத்தைக் கோரும் சூழலில், உள்ளகப் பொறிமுறை என்பது காலத்தைக் கடத்துவதற்கான உத்தியாக இருக்குமே தவிர ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கப் போவதில்லை என்பதையே இலங்கையின் கடந்த காலப் பட்டறிவுகள் உணர்த்தி நிற்கின்றன.

நீதி நிலைநாட்டப்படுவதை விட நிலைநாட்டப்படுவதைப் போன்று காண்பிப்பது முக்கியம். ஆனால் இலங்கை அரசு நீதி நிலைநாட்டப்படுவதைப் போன்று காண்பிப்பதற்குக் கூட முயலவில்லை.


2010ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச, நல்லிணக்க ஆணைக்குழுவை அமைத்தார். அந்த ஆணைக்குழு 2011ஆம் ஆண்டு பரிந்துரைகளை முன்வைத்தது. அதில் பல பரிந்துரைகள் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பால் ஏற்றுக்கொள்ள முடியாதவையாக இருந்தன. ஆனாலும் ஒரு சில பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியனவதாக இருந்தன. அவற்றை இலங்கை அரசு இற்றைவரை நடைமுறைப்படுத்தவில்லை. இதுதான் இலங்கை தனது விடயத்தை தானே கையாள்வதன் இலட்சணம்.

இதனை விட இலங்கையின் நீதித்துறைக் கட்டமைப்பு ஊடாக இறுதிப் போரின் போதான குற்றங்களுக்கு தண்டனை கிடைக்குமா என்பது மிகப் பெரிய கேள்வியே? அவ்வாறு தண்டனை கிடைத்தாலும் ஆட்சியாளர்கள் குற்றவாளிகளை தண்டிப்பார்களா என்பது அடுத்த மில்லியன் டொலர் கேள்வி?

மிருசுவில் படுகொலையில் சம்பந்தப்பட்ட இராணுவச் சிப்பாய் குற்றவாளியாக இனம்காணப்பட்டு சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில், ஆட்சிக்கு வந்த – உள்ளகப் பொறிமுறை பற்றி பிரஸ்தாபிக்கும் கோத்தாபய, அந்தச் சிப்பாயை பொதுமன்னிப்பில் விடுவித்தார். கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கிலிருந்து முன்னாள் கடற்படைத் தளபதி விடுவிக்கப்பட்டிருந்தார். திருகோணமலை குமாரபுரம் படுகொலை வழக்கிலிருந்து இராணுவச் சிப்பாய்கள் விடுவிக்கப்பட்டனர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை தொடர்பில் கைதான பாதுகாப்புத் தரப்பினர் விடுவிக்கப்பட்டனர். இவ்வாறு பல சம்பவங்கள் அண்மைக் காலத்தில் இலங்கையில் அரங்கேறியுள்ளன.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக மூன்றாம் தரப்பின் ஈடுபாட்டுடன், மூன்றாம் தரப்பு நாடொன்றின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தையே, ஒரு தலைப்பட்சமாக மீறி நடந்து கொள்ளும் கோத்தாபய அரசிடமிருந்து உள்ளகப் பொறிமுறை ஊடாக நீதி நிலைநாட்டப்படும் என்று நம்ப முடியுமா?

இலங்கையில் இறுதிக் கட்டங்களில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை உள்ளகப் பொறிமுறை ஊடாகத் தீர்ப்பதற்கு இணங்குவதானது கோழிக்கு ஓநாயை காவல் வைப்பது போன்றதாகும்.




# இலங்கைக்கு மதிப்பளித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலர் குட்டரஸ்

## அரசு பெருமிதம்

**கொழும்பு, செப். 22**



**ஐ.நா. பொதுச் சபை அமர்வில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஐ.நா. பொதுச் செயலர் பெரும் வரவேற்பளித்துள்ளார். நாடு என்ற வகையில் எமக்கு அது பெருமையான விடயம். இவ்வாறு ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் எஸ்.பி. திஸாநாயக்க மேலும் கூறியவை வருமாறு,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கைக்கு எதிராக கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து காரசாரமான விமர்சனங்களை மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் முன்வைத்துள்ளார்.

எனினும், ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் பங்கேற்றுள்ள எமது ஜனாதிபதியை ஐ.நா. பொதுச் செயலர் கௌரவத்துடன் வரவேற்றார். ஐ.நா.வுடன் இணைந்து பயணிப்பதற்கும், ஐ.நா.வின் ஒத்துழைப்பு இலங்கைக்கு வழங்கப்படும் எனவும் இதன்போது கூறப்பட்டுள்ளது. மிகவும் சாதகமான பெறுபேறுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனையொட்டி நாடு என்ற வகையில் பெருமையடைகின்றோம்.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் என்பவர், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அதிகார எல்லை மற்றும் ஐ.நா. பிரகடனங்களை அப்பட்டமாக மீறி சட்டவிரோதமான முறையில் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். இலங்கைக்குள் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றி கதைப்பதற்கு அவருக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. உள்ளக விவகாரங்களில் தலையிடுவதற்கு இடமில்லை என ஐ.நா. பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறிருக்கையில் மிச்சேல், எம்மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை தொடுத்துவருகின்றார். மிச்சேல் அமெரிக்காவுக்கு சார்பானவர். தனது தாய் நாட்டுக்கு துரோகம் இழைத்தவர், என்றார் எஸ்.பி. திஸாநாயக்க.

(ஓ.44)

## மனித உரிமைகள் விவகாரம்

# இலங்கை தொடர்பில் ஆராய 5 பேர் கொண்ட தனிக்குழு

## ஐரோப்பிய நாடாளுமன்றம் அமைத்தது

கொழும்பு, செப். 22

ஐரோப்பிய நாடாளுமன்றம், ஐரோப்பிய நாடுகளுக்கான இலங்கையின் ஏற்றுமதிக்கு மேலும் வரிச்சலுகைகளை வழங்க அனுமதிக்கும் மனித உரிமை விவகாரங்களை இலங்கை அரசு பின்பற்றுகிறதா என்பதை ஆராய ஐந்து பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.

இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் எதிர்வரும் 27ஆம் திகதி இலங்கைக்கு வருகை தருகின்றனர். அவர்கள் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி வரை நாட்டில் தங்கியிருப்பார்கள். அரச உயர்மட்டம், தொழிற்சங்கங்கள், சிவில் சமூகம், முதலாளிகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகளை குறித்த குழு சந்திக்கவுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது உட்பட மனித உரிமைகளுக்கு தீங்கு விளைவிப்பதால் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இரத்துச் செய்யும் யோசனை உள்ளடங்கிய தீர்மானத்தை ஐரோப்பிய ஒன்றியம் கடந்த ஜூன் மாதம் நிறைவேற்றியமை குறிப்பிடத்தக்கது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 24.05.1947 விண்ணில் 23.08.2021

### அமரர் திரு. நாகலிங்கம் இரட்ணம்

**(உரிமையாளர் சன்லின்சோப் இண்டஸ்ரீஸ்)**

நாகலிங்கம் பெற்றெடுத்த இரத்தினமே
வீட்டுக்கு மூத்த மருமகனாய் வந்து
பாசமுடன் எம்மை காத்து நின்றீரே!
களையான உங்கள் முகம் கருணையான உங்கள் இதயம்
கனிவாக பேசும் உங்கள் வார்த்தைகள்
இவை எல்லாம் நாம் பார்த்ததுண்டு!
அன்பான துணைவியுடன் பலவருடம்
ஒன்றாய் இணைபிரியாது வாழ்ந்ததை
கண்ணூடாய் கண்டதுண்டு!
பண்பான பிள்ளை இரண்டைப் பெற்று
பாசத்துடன் ஊட்டிவளர்த்து
நற்தந்தை என பலர் வாழ்த்தியதை கேட்டதுண்டு!
எல்லாரும் உங்கள் உறவு என்று
மறந்தும் கூட பிரித்துப்பார்த்தை நாம் யாரும் உணர்ந்ததில்லை!
பேரக்குழந்தை ஐவரைக் கண்டு
கூடிக் குலவியதையும் பாசத்துடன்
அணைத்து மகிழ்ந்ததையும் பார்த்ததுண்டு.
தாய் தந்தையாக நின்று எங்கள் திருமணத்தில்
அன்பையும். ஆசியையும் வழங்கிய
உங்கள் பரிவை யாம் பார்த்ததுண்டு!
குடும்பத்தின் சுடர் ஒன்று மறைந்த சேதி கேட்டு
தாங்கொனா துயருடன் காலத்தின் கோலத்தினால்
கடமைசெய்ய முடியாத சோகத்தில் இருக்கும்

அன்புடன் திரு.திருமதி விக்னேஸ்வரன் குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



மண்ணில் 24.05.1947 விண்ணில் 23.08.2021

### அமரர் திரு. நாகலிங்கம் இரட்ணம்

**(உரிமையாளர் சன்லின்சோப் இண்டஸ்ரீஸ்)**

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் எமது வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே உங்கள் சிரித்த முகமும், கனிவான பேச்சும் பண்பான செயலும், அழகிய தோற்றமும் எமது கண்முன்னே நிழலாடுகிறதே இவ்வளவு சீக்கிரத்தில் நீங்கள் எம்மை விட்டுப் பிரிவீர்கள் என நாம் கனவிலும் நினைக்கவில்லை எங்கள் உயிர் உள்ளவரை அழியாது உங்கள் நினைவு தினம் தினம் உங்கள் நினைவில் எங்கள் கண்ணீர் தான் கரைகிறது நீங்கள் காட்டிய பாதையில் நாம் எமது மிகுதி பயணத்தை தொடர்கின்றோம் உங்கள் ஆத்மா நல்லூரான் திருவடியில் சாந்தி பெற என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் இறுதி யாத்திரையின் போது எமக்கு சகல வழிகளிலும் முன்னின்று உதவிய அன்பு உள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓட்டுமடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

# மதுபானசாலைகள் திறப்பு நான் வாய் திறக்க மாட்டேன்

## சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவிப்பு



**கொழும்பு, செப்.22**

**மக்கள் மத்தியில் அரசாங்கம் மீது கடும் விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கின்ற மதுபானசாலைகள் திறக்கப்பட்ட விடயம் தொடர்பில் எந்தவொரு கருத்தையும் ஊடகங்களுக்கு வெளியிட முடியாது என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில். மதுபானசாலைகள் திறக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; மதுபானசாலைகள் திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது. எனவே அது குறித்து தற்போது கருத்து வெளியிடுவது பொருத்தமானதாக இருக்காது.

எனவே இவ்விடயம் தொடர்பில் கருத்து தெரிவிப்பதிலிருந்து நான் விலகிக்கொள்கின்றேன். இது குறித்த கேள்விகளை தொடர்ந்தும் கேட்டு என்னை அசௌகரியத்துக்கு உட்படுத்த வேண்டாம் காரணம் என்னால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் இவ்விவகாரத்துடன் தொடர்புடைய சட்டரீதியான நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்துவதாகக் காணப்பட்டால் நான் தனித்துத் தான் அதற்கு முகங்கொடுக்க வேண்டும். எனவே என்னால் இதுபற்றி எதனையும் கூற முடியாது - என்றார். (ஐ-இ)



## புலிக்கொடியை ஏந்தியவாறு ஐ.நா.முன்றலில் ஆர்ப்பாட்டம்

ஜெனீவா,செப்.22

இன அழிப்புக்கு நீதி கோரி ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் புலம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்கள் புலிக்கொடியை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஐ.நா.வின் 48 ஆவது மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் இடம்பெற்று வருகின்ற நிலையில், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இறுதிப்போரில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் இன அழிப்பு தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும். ஈழத் தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டக்காரர்கள் விடுதலைப் புலிகளின் கொடியை ஏந்தியிருந்ததுடன், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் உருவப்படங்களையும் தாங்கியிருந்தனர். (ஒ-4)

# கிரீடத்தை வென்ற இலங்கைப் பெண்



பொட்ஸ்வானாவில் நடைபெற்ற 'மிஸ் டீன் இன்டர்நஷனல் போட்ஸ்வானா 2021' போட்டியில் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த கிம்ஹானி பெரேரா வெற்றி பெற்றுள்ளார்.

17 வயதான இவர் பிலிக்வே மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியில் பங்கேற்றுள்ளார்.

நிகழ்வின் ஆரம்பச் சுற்றுகளில் போட்டியிட்ட 42 போட்டியாளர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 14 போட்டியாளர்கள் இறுதி[illegible] கொண்டனர். இவர்களில் [illegible] வெற்றியாளராக அறிவிக்கப்பட்டார்.

பொட்ஸ்வானாவின் பிலக்வேயைப் பூர்வீகமாகக் கொண்ட கிம்ஹானி, லிவிங்ஸ்டன் கோலோபெங் கல்லூரியின் பட்டதாரியாவார். இவரது தந்தை [illegible], பொட்ஸ்வானா [illegible] என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி நடராஜா இராஜேஸ்வரி



மலர்வு 23.06.1944

உதிர்வு 03.10.2020

(திதி - துதியை)

எம்மை விட்டு சென்று ஓராண்டு கடந்தாலும்
உம் ஆன்மா இறைவனுடன் இரண்டறக் கலந்தாலும்
எம்மை விட்டு உம் நினைவகலாது
எம் மூச்சுக்காற்றாய் தினமும் உம்மை சுவாசிப்போம்
காலம் கடந்தாலும் உம்மை என்றும் நேசிப்போம்
தினமும் உம் நினைவுகளைத் தரிசிப்போம்
கனவில் என்றாலும் தினமும் உம்மை ஸ்பரிசிப்போம்
நீர் செய்த தியாகங்கள் கோடி
அதனால் என்றும் உம்மை நினைக்க வேண்டுகிறோம்
- இறைவனை நாடி

உமை என்றும் மனதால் வணங்குகிறோம் பூத்தூவி
உம்மை மிஞ்ச எமக்கு இவ்வுலகில் எவரும் இல்லை மேவி
காற்றில் உம் சலசலப்பு எம் பேச்சில் உம் கலகலப்பு
எம் விடியலில் தினமும் உம் ஒளி
நாம் செல்கிறோம் என்றும் நீர் அமைத்த வழி
உம் ஆன்மா என்றும் எமை வழிநடத்தட்டும்
நீர் அமைத்த பாதையில் எம் கால்கள் நடக்கட்டும்.

வட்டுவினி, இணுவில் மேற்கு,
இணுவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மதுக்கடைகளைத் திறக்க அரசு அனுமதிக்கவில்லையாம்

## அமைச்சர் நாமல் புதுக்கதை



**கொழும்பு, செப்.22**

**மதுபானசாலைகளைத் திறப்பதற்கு அரசு தீர்மானிக்கவில்லை. இதற்கு யார் அனுமதி வழங்கியது என்றும் தெரியாது என விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டைத் திறப்பதற்கு ஒரு நிமிடம் இருக்கும் போது மதுக்கடைகள் நிரம்பினால், அதைத் தாண்டி நாம் எங்கு செல்கிறோம் என்பதை யோசிக்க வேண்டும்.

மதுக்கடைகள் திறப்பது தொடர்பில் தவறான செய்தி பரவியுள்ளது. எனது கருத்துப்படி, கொரோனாத் தடுப்புக் குழுவோ அல்லது அரசோ அத்தகைய தீர்மானத்தை எடுக்கவில்லை.

மருத்துவர்களின் ஆலோசனையின் பேரில், நாட்டில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப, கொரோனாத் தொற்றைக் குறைக்கும் நோக்கில் தான் கொரோனாத் தடுப்புக் குழு தீர்மானம் எடுக்கும்.

மதுக்கடையைத் திறப்பது குறித்து இந்தக் குழு எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை.

எவ்வளவுதான் பொருளாதாரக் கஷ்டங்கள் இருந்தாலும், பயணக் கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், மதுக்கடைகளைத் திறந்தவுடன், நீண்ட வரிசைகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது. -என்றார். (ஒ-4)

# 1,600 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதி

## ரூ.5 மில்லியன் ஒதுக்கீடு

மானிப்பாய், செப்.22

பொருண்மியம் நலிந்த மக்களின் அடிப்படைத் தேவையான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை நிதியிலிருந்து 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடு முடக்கப்பட்டு பயணத் தடை நடைமுறையில் உள்ளதால், பெருமளமான மக்கள் பட்டினி நிலைக்கு முகம் கொடுத்துள்ளனர். அத்துடன் அரசால் வழங்கப்பட்ட 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு போதுமானதாக இல்லை.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட எண்ணிக்கையானோர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்றுள்ளனர். 30க்கு மேற்பட்ட இறப்புக்களு[ம்] பதிவாகியுள்ளன.

எமது சபையால் தொற்[று] நீக்கல் பணிகள், பொ[து] மக்களுக்கான விழிப்[பு]ணர்வூட்டல் பணிகள் சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து பி.சி.ஆர், அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் பிரதேச செயலகத்தால் தெரிவுசெய்யப்படும் ஆயிரத்து 600 குடும்பங்களில் ஒரு குடும்பத்துக்கு தலா 3 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களை விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளோம் என்று தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார். (ஒ-4)

# லொஹான் ரத்வத்த மீது சட்ட நடவடிக்கை தாமதம்

கொழும்பு, செப்.22

இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்தவத்தவுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்று சிறைக் கைதிகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சட்டத்தரணி சேனக பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அனுமதியில்லாது இரண்டு சிறைச்சாலைகளுக்குள் நுழைந்து கைதிகளை அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் பதவி விலகியுள்ள லொஹான் ரத்வத்தவுக்கு எதிராக விரைவாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் நாம் சி.ஐ.டியில் முறைப்பாடு செய்[illegible] நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மலர்ந்தது 18.06.1966 — உதிர்ந்தது 18.09.2021

அன்பும் பண்பும் நிறைந்த பிரபல்யமான
சிறந்த மிருதங்க இசை கலைஞர்

## திரு.சதா.வேல்மாறன்

பண்பான குணமும்
முகத்திலோ அன்பு சிரிப்பும்
சிரிப்பிலோ பாசமான கதைகளும்
கதைகளிலோ கலகலப்பும்
இந்த கலகலப்பான கலைஞனை
எனி எப்போது காண்போம்……

**தவிக்கின்றோம் கண்ணீருடன்**
**மிருதங்க வித்துவான்**
**திரு.வே. அம்பலவாணர் மாஸ்டர் குடும்பத்தினர்**
**நாச்சிமார் கோயிலடி.**

# மரண அறிவித்தல்



## பெருமாள்பிள்ளை பாலச்சந்திரன்

பிறப்பு 25.12.1946 — இறப்பு 21.09.2021

மூத்தவிநாயகர் வீதி, முதலாம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பெருமாள்பிள்ளை பாலச்சந்திரன் (21.09.2021) அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பெருமாள் பிள்ளை பத்மாவதி தம்பதியரின் மூத்த புதல்வரும், அமரர் ஜெயசிறி (அச்சுவேலி) இன் அன்புக் கணவரும், லோகேஸ்வரன் (வல்வெட்டி), அமரர் இரத்தினேஸ்வரி மற்றும் தனலட்சுமி, சாந்தலட்சுமி (ஆசிரியை, கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), விக்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகாம்பிகை (வல்வெட்டி), ஆனந்தன் (வல்வெட்டி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.09.2021) செவ்வாய்க்கிழமை மாலை செம்மணி இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மண்ணில் 02 . 04 . 1975 — விண்ணில் 21 . 09 . 2021



## பாலசுப்பிரமணியம் பிறேம்லால் (JP)

**(மக்கள் வங்கி-பிரதான வீதி, யாழ்ப்பாணம்)**

அரியாலை மேற்கு, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பிறேம்லால் நேற்று (21.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான பீதாம்பரம் சாந்தநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், நளினா (கௌரவ உறுப்பினர்-யாழ் மாநகர சபை) அவர்களின் பாச மிகு கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் கருணாவதி, பத்ம நாதன், சந்திரா, தர்மராஜா, ஆனந்தராஜா, புஸ்பநாயகி, ஜெயசிங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், அரவிந்தன் (ஜேர்மனி), ஜெயவிந்தன் (இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்), சங்கீதா, லிகிந்தா, லசாந்தபிரதீப், வினோதினி, டிசாந்த், குகசாந்த், டேனுஜா ஆகியோரின் மைத்துனரும், சுகந்தினி, நந்தினி, கஜந்தன், மதிமாறன் ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும், கபிசா, டினுசா, தருண்கார்த்திக் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.04, கலைமகள் வீதி, அரியாலை மேற்கில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (22.09.2021) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு:**
**077 641 0869**
**077 005 1293**

**தகவல்: குடும்பத்தினர்.**

# கலாசார தூதுவரானார் இளம் பாடகி யொகானி




கொழும்பு, செப். 22

மூன்று மாதங்கள் குறுகிய காலத்தினுள் முழு உலகையும் 'மெனிக்கே மகே ஹித்தே' என்ற பாடல் மூலம் கவர்ந்த இலங்கை இளம் பாடகி யொகானி டி சில்வா, இலங்கை இந்திய கலாசார தூதுவராக நியமிக்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் இந்தியத் தூதரகம் இவருக்கு இந்த அந்தஸ்தை வழங்கிக் கௌரவித்துள்ளது.

யொகானியை வெகுவாகப் பாராட்டியுள்ள இந்திய தூதரகம் இவரது பாடல் இந்தியாவின் மூலை முடுக்கெங்கும் ஒலிப்பதாகவும் பிரபலங்கள் இந்தப்பாடலை ரசிக்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளது. இலங்கை-இந்திய கலாசார பாரம்பரிய உறவுகளுக்கு இவரது பாடல் மீள் பிரவேசத்தை வழங்கியுள்ள தாகவும் தெரிவித்துள்ளது. மேலும் இவரது பாடலை யூடியூப் தளத்தில் 117 மில்லியன் பார்வையாளர்கள் பார்வையிட்டுள்ளனர்.

(த-இ)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 . 04 . 1944 — மறைவு 22 . 09 . 2017



## அமரர் பொன்னம்பலம் நாகரத்தினம்

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகி போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்

**அன்புடன்**
**பெறாமக்கள்**

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 02 . 04 . 1975 — மறைவு 21 . 09 . 2021



மக்கள் வங்கி யாழ். பிரதான வீதிக் கிளை ஊழியர்


## அமரர் பாலசுப்பிரமணியம் பிரேம்லால்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மக்கள் வங்கி - யாழ் பிரதான வீதிக்கிளை**
**உரும்பிராய் சேவை நிலையமும்**

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 19 . 01 . 1965 — ஆண்டவன் அடியில் 19 . 09 . 2021



## அமரர் ஆரோக்கியநாதர் ஞானசேகர்

( Mercantile security service ஊழியர்)

உயரப்புலம் ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கியநாதர் ஞானசேகர் அவர்கள் 19 - 09 - 2021 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆரோக் கியநாதர் (ராசா), டெய்சி ஆகியோரின் அன்பு மகனும் ஞானசேகர் மேரியூடிற்றா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற றோமான் மற்றும் அப் ளோனிக்கம்மா அவர் களின் அன்பு மருமகனும் ஞானமேரிஸ்ரலா, மேரிடியூலா, ஜெருசன் அவர் களின் பாசமிகு தந்தையாரும் பாலேந்திரன் அவர்களின் அன்பு மாமனாரும் பற்றீசியா, லெற்றீசியா, டெய்சிராணி, ஸ்ரீ மரியா (சுவிஸ்லாந்து), றோசியா (லண்டன்) அவர்களின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற எமில் அஞ்சலோ, அன்ரன் மாணிக்கராஜா, அலோசியஸ் (சுவிஸ்லாந்து), சுரேஷ் குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் மரிய அனிற்றா, தோமஸ்மூர், அனோயா, நிரோசாந், மேரி டென்சியா, ஆன்றெஜிதா, யூட் ஜீவிதன், றோசன், சுவீத்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வேலையாட்கள் தேவை.

**077 558 8835**

## கணித பிரத்தியேக வகுப்புக்கள்

யாழ் நகரை அண்டிய பகுதிகளில் தரம் 6 தொடக்கம் O/L வரையிலான வகுப்புக்களிற்கு கணித ஆசிரியரால் தமிழ் மொழி மூலம் கணிதம் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.


**078 727 4427**

## வல்லிபுர மாயவன் அடியவர்களுக்கு அன்பான வேண்டுகோள்

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று காரணமாக அதன் பாதிப்பினை கருத்தில் கொண்டு எமது ஆலயத்தின் வருடாந்த மகோற்சவமானது அடியவர்களின் நலனைக் கருதியும் தடங்களின்றி நடைபெற வேண்டும் என்ற காரணத்தினாலும் பிற்போடப் பட்டமை தாங்கள் அனைவரும் அறிந்ததே இந்நிலையில் ஆலயப் பகுதியில் வதியும் 12 முதியவர்கள் உணவின்றி கஷ்டப்படுவதாக முகப்பு புத்தகப் பதிவின் மூலம் அடியவர் ஒருவரால் வெளிக்கொணரப்பட்ட நிலையில் தற்போது அவர்களுக்கு பலராலும் உலர் உணவுப் பொருட்கள், சமைத்த உணவுகள் ஏனைய அத்தியாவசிய பொருட்கள், பணம் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அதனை வழங்குபவர்கள் அவை அந்த முதியவர்களுக்கு கிடைக்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்வதுடன் மேலும் ஆலய வீதியில் அமைந்துள்ள மடங்களில் தற்போதைய சூழலில் அன்னதானம் வழங்குவதற்கு சுகாதாரப் பிரிவினால் அனுமதி வழங்கப் படவில்லை என்பதை அறியத்தருவதுடன் இக்காலப் பகுதியில் அன்னதானத்திற்காகவோ அல்லது ஆலயப் பகுதியில் வதியும் முதியவர்களுக்கு உணவு வழங்குவதற்கென்றோ நிதி சேகரிக்க எதுவித அனுமதியும் தர்மகர்த்தா சபையினரால் எவருக்கும் வழங்கப்படவில்லை என்பதை அடியவர்களாகிய உங்களுக்கு அறியத் தருவதுடன் தாங்கள் முதியவர்களுக்கு உதவி செய்ய விரும்பின் நேரடியாக செய்யுமாறு அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.

**முகாமை அறங்காவலர்**
**வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்**

## நான்காம் ஆண்டு நினைவலைகளில்...



தோற்றம் 02 . 04 . 1944 | மறைவு 22 . 09 . 2017

### அமரர். பொன்னம்பலம் நாகரத்தினம் (J.P)

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலை பொறியியலாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை)

ஆண்டுகள் பல ஓடி மறைந்தாலும்
அழியாது நிலைத்திருப்பீர் எங்கள் நல் ஆசானே!
எம் உயர்வுக்காய் உழைத்திட்ட உத்தமரே!
உமைப் பிரிந்து வாடுகின்றோம், வருந்துகின்றோம்!
ஆறவில்லை எம் துயரம், தேறவில்லை எம் உள்ளம்
உமைத் தேடி அலைகின்றோம் உமைப் பிரிந்த மாணவர் நாம்
எம் நன்நிலைக்காய் அயராது இரவு பகல் பாடுபட்டீர்!
எம் பெருமை கண்டு நிறைவாக உளம் மகிழ்ந்தீர்!
நூறு வயது நிறை கிழவனாய் வலம் வந்து
மாணவர் எம் உயர்வு கண்டு வாழ்த்திடுவீர்
என இருந்த எம்மை இடைநடுவில் தவிக்கவிட்டு
எமைப் பிரிந்து ஈசனிடம் விரைவாகச் சென்றதென்ன?
புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர் நாம்
சித்தி பெற அயராது உழைத்தவரே!
புலமைப் பரிசில் மீள் பரிசீலனைத் திட்டத்தை
முதன்முதலில் உருவாக்க உம்மை மறந்து பாடுபட்டீர்
அதில் வெற்றியும் கண்டீரே!
'உயர்குரு பிரதீபா விருது" பெற்ற உம் அன்பு மனையாள்,
சேவைநிறை அதிபருடன் சேர்ந்தே பயணித்தீர்!
சேவைகள் பல புரிந்தீர்!
'மாமா" என ஓடி வந்தோம் மாணவர் நாம்
உளமறிந்து உதவிகள் பல செய்தவரே!
எம் கல்விக்காய் அயராது உழைத்தவரே!
ஆற்றல்மிகு ஆசானாய், அறிவு நிறை அறிஞனாய்
கவர்ச்சி மிக்க பேச்சாளராய், கவிஞராய்,
சோதிட வல்லுநராய், சகலகலா வல்லவனாய் திகழ்ந்திட்ட மாமனிதா!
கலாநிதி தியாகராஜவின் உறவினராய், அரசியல் நண்பனாய்,
கலாநிதி கென்னடியின் உற்வினராய், ஆருயிர்த் தோழனாய்
கற்றோரை நேசிக்கும் உயர்பண்பு கொண்டவரே!
அறிஞர்கள் பலருடன் சேர்ந்தே இறைவனடி சேர்ந்தீரோ!
ஆயிரம் உறவுகள் எம் பக்கம் இருந்தாலும்
தாங்காத வலிகளுடன் தவித்தே துடிக்கின்றோம்
கண்ணில் நீர் மல்க உம் பாதம் பணிகின்றோம்!
உங்கள் உள்ளம் குளிர ஏழை மாணவர்களின்
கல்வி வளர்ச்சிக்காய் எம் சேவை தொடர்ந்திடுவோம்!
வாழ்த்திடுவீர் எம்மைப் பாரினில் நாம் உயர்ந்திடவே!

**உங்கள் பிரிவால் துயருறும்,**
**உங்கள் பாசமிகு பழைய மாணவர்கள் - காரைநகர்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 27 . 07 . 1949 | மறைவு 20 . 09 . 2021

### அந்தோனி யோசேப்

**Com.Trind , B.A, Dip.in Edu. M.Phill**

**ஓய்வு பெற்ற ஆசிரியர்– யா/ வீமன்காமம் மகா வித்தியாலயம்**

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி யோசேப் நேற்று முன்தினம் (20.09.2021) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனி ஆனாசி ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அருளப்பன் றீற்றம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், Dr. திரேஸ் அன்ரனிற்றா (அருள் ஆயுள்வேத வைத்தியசாலை) அவர்களின் அன்புக் கணவரும், வொயிற்லன் (மாணவன், யா/ உடுவில் மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான மரியம்மா, மிக்கேல், வெரோணிக்கா, பேதுறு மற்றும் அருட் சகோதரி மேரிசிசிலியா (செபமாலைத் தாசர் கன்னியர் சபை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரான்சிஸ் சேவியர் (ஹொலண்ட்), அருட் சகோதரி பிரான்சிஸ்கா (கார்மேல் கன்னியர் சபை), மரியகொறற்றி, அன்ரன் கிறேஷியன் (ஆசிரியர் - யா/ ஒஸ்மானியக் கல்லூரி), Dr. அன்ரன் அனஸ்ரீன் (சித்த மருத்துவர் மட்டக்களப்பு), அமல சபீனா (இலண்டன்), வசந்தகுமாரி, காலஞ்சென்றவர்களான அந்தோனி, மோட்ச அலங்காரம், தாவீது (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (23.09.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் சுகாதார வழிகாட்டல் நடைமுறைகளின் கீழ் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மின் தகனம் செய்யப்பட்டு சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் அஸ்தி நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**Dr. சுப்பிரமணியம் வீதி,**
**பஸ் நிலையம் அருகாமை,**
**சுன்னாகம்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**Dr. திரேசா**
**077 513 9021**

## நான்காம் ஆண்டு நினைவுகளுடன்...



தோற்றம் 02 . 04 . 1944 | மறைவு 22 . 09 . 2017

### அமரர். பொன்னம்பலம் நாகரத்தினம் (J.P)

(அகில இலங்கை சமாதான நீதவான், ஓய்வு நிலை பொறியியலாளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை)

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு அழியவில்லை என் மனதில்
நித்தம் உம்மைத் தேடி அலைகின்றேன்!
எனைப் பிரிந்து நெடுந்தூரம் சென்றதென்ன?
கவிதைகள் பல எழுதிக் காதலித்துக் கரம் பிடித்த
என்னைக் கண்ணிமை போல் காத்து வந்தீர்!
ஐம்பத்தொரு வருடங்கள் சிறப்பாக வ[illegible]ந்து வந்தோம்.
சேர்ந்தே சேவை செய்தோம் மாணவ[illegible]கள் கல்விக்காய்
என்னைத் தவிக்க விட்டு இடைநடுவில் மறைந்ததென்ன?
போகும் வழியெல்லாம் உங்கள் முகம் தெரிவதென்ன?
சிறப்பாக என்னை வாழ வைத்துச் சென்றவரே!
செல்லும் இடமெல்லம் உங்கள் புகழ் கேட்கின்றேன்!
இதை விடவா பெருமை எனக்குண்டு இவ்வுலகில்
எண்ணி, எண்ணி நித்தம் பெருமிதமே கொள்கின்றேன்
நீங்கள் தந்த வீட்டில்தினமும் உம்மைத் தொழுகின்றேன்!
பார் போற்றும் பாரதிக்கு தவறாமல் விழா எடுத்த பாவலனே!
பாரதி பிறந்த மாதமதில் பரமனடி பதித்தீரே!
தனிமை என்னை வாட்டி வதைத்தாலும்
உங்கள் நினைவு என்னை அணைத்துச் செல்கிறதே
உங்களைச் சேரும் நாளை எண்ணி, எண்ணி வாழ்கின்றேன்!
மீண்டும் நாம் சந்திப்போம்!
[illegible] நாளை எண்ணி ஆவலுடன் காத்திருப்பேன்!

**[illegible],**
**காரைநகர்**

**என்றும் உங்கள் நீங்காத நினைவுகளுடன் வாழும்**
**உங்கள் ஆருயிர் மனைவி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு 09 • 09 • 1933

உதிர்வு 16 • 09 • 2021

## டாக்டர். திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர்

**(வயது 88)**

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்டு இறுதியாக கனடாவில் (பிரம்டன்) வாழ்ந்த Dr.திருமதி. அன்னபூரணம் ஞானசம்பந்தர் அவர்கள் கடந்த (16.09.2021) வியாழக்கிழமை அன்று அவரது 88 ஆவது வயதில் கனடாவில் சிவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் பொன்னையா - இலட்சுமிபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான Dr.சரவணமுத்து - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற Dr.எஸ்.எஸ்.ஞானசம்பந்தரின் பாசமிகு மனைவியும், சாந்தி (Germany) ,சந்திரகுமார் (Canada), மாலதி (UK), சுமதி (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், லியனாராச்சி, முரளீதரன், சுரேந்தினி, ஆனந்தசீலன், அருள்ராஜன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான தனலட்சுமி, பிறைசூடி, அரியமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருநாசலம், பரமேஸ்வரி, மற்றும் வேலாயுதம் (USA), காலஞ்சென்றவர்களான எஸ்.ஆர்.ரட்னராசா,Dr.சோமசுந்தரம், திருமதி சாவுச்சியம் தம்பிஜயா,Dr.பாலசந்திரன், திருமதி தில்லைராஜேஷ்வரி ராமலிங்கம், திருமதி தில்லைநாயகி துரைசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பூர்ணிமா, டினித்தி, அஞ்சலி, ஜனகன், சாதனா, பிரகாஷ், ஜனன், ஹஷ்வீன், ஹஷ்வீனா, சயந்தன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும், லியோன், வின்சன், பவுலா, மக்சிமிலியான், லெனி ஆகியோரின் அன்புப் பூட்டியும், கௌசலா, பத்மினி, விக்னராஜ், நிர்மலா, வசந்தலா, குகராஜ் ஆகியோரின் பாசமிகு சிறியதாயும், சத்தியவாணி, சத்தியானந்தன், சத்தியசீலன், சத்தியதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சுபேந்திரனின் (USA) பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Scarborough Ogden funeral home இல் September 24ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், 25ஆம் திகதி சனிக்கிழமையும் மாலை 5.00 முதல் 8.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குடும்பத்தினரால் கிரியைகள் செய்யப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு,**

**சந்திரகுமார் (மகன்) CANADA - 613 266 0411, சுமதி (மகள்) CANADA - 416 627 7202**

**மாலதி (மகள்) CANADA - +44 7908 020084, சாந்தி (மகள்) GERMANY - +49 176 47885393**

**OGDEN Funeral Home, 4164 Sheppard Avenue East, Scarborough, Ontario M1S 1T3**

**Viewings:**

Friday, September 24th 5:00 – 8:00 pm At Ogden Saturday, September 25th 5:00 – 8:00 pm At Ogden

**Funeral:**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sunday, September 26th 10:30 – 12:30 pm At Ogden (Limited numbers, need to register) Cremation:

Sunday, September 26th 1:00 – 1:30 pm At Highland Hills (Family Only)

# சாராயக் கடைகளை திறக்க உத்தரவிட்டது பேயாக இருக்கலாம்

## மைத்திரி கிண்டல்



கொழும்பு, செப். 22 மதுபான நிலையங்களைத் திறப்பதற்கு உத்தரவு வழங்கியது பேயாக இருக்கலாம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மதுபான நிலையங்களை திறக்க யார் உத்தரவிட்டார்கள் என்பது சரியாக தெரியாவிட்டால் இதுவே பதில் எனவும் நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசிடம் பணம் இல்லையெனவும் அதனாலேயே மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

செல்வந்தர்களுக்கு மதுபானங்களை இணையவழி ஊடாக வீட்டுக்கே கொண்டுவரலாம். ஆனால், மதுக்கடைகள் திறக்கப்பட்டமையால் அன்றாடம் மூன்றுவேளை உணவைப் பெற்றுக் கொள்வதற்கு சிரமப்படுபவர்களே மதுக் கடைகளுக்கு முன்னால் வரிசையில் காத்திருக்கிறார்கள். எனவே மதுபான நிலையங்கள் திறக்கப்பட்டமையானது அருவருப்பான செயலாகும். - என்று மேலும் தெரிவித்தார். (து-இ)

## கண்ணீர் அஞ்சலி



எமது வளர்மதி முன்னேற்றக் கழக நிர்வாக சபை உறுப்பினர் அ. சயந்தன் அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் கந்தசாமி அருணாசலம்**

பிறப்பு 01.11.1951 இறப்பு 20.09.2021

அவர்கள் கடந்த (20.09.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரிற்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம். அமரரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்**
**சம்பியன் லேன், கொக்குவில்.**

## மணிவிழா வாழ்த்துக்கள்

யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய ஆசிரியை

**திருமதி சிவயோகம் சிவபாதசுந்தரம்**

(SLTS-I )



சேவை விபரம்

1989 – 1993
கிளி / உருத்திரபுரம் ம.வி
1993 – 1994
யா/ பலாலி ஆசிரிய கலாசாலை
1995 – 1999
கிளி / உருத்திரபுரம் ம.வி
1999 – 2015
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
2015 – 2016
யா/ கச்சாய் மகா வித்தியாலயம்
2016 – 2021
யா/ அல்லாரை அ.த.வித்தியாலயம்

இன்று (22.09.2021) இல் அகவை அறுபதை அடைந்து மணிவிழாக் காணும் நாயகியை மனதார வாழ்த்திடுவோம்.

வாழ்த்துவோர்
பாடசாலைச் சமூகம்
யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்

## கண்ணீர் அஞ்சலி



புகழ்பூத்த மிருதங்க வித்துவான்

**அமரர் சதாசிவம் வேல்மாறன்**

அவர்களுக்கு எமது இதய அஞ்சலியை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினர்க்கு எமது இரங்கலையும் தெரிவிக்கின்றோம்.

**தர்மகர்த்தா சபை**
**யாழ் வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் தேவஸ்தானம்,**
**(நாச்சிமார் கோவில்)**

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

அமரரர் **நடராசா குணநாதன் (குணம்)**



பிறப்பு 10.03.1956 இறப்பு 03. 10.2020

**திதி : 22.09.2021**

ஆண்டு ஒன்று ஆனாலும்
அழியவில்லை உம்நினைவு
- நீவிர்
இவ்வுலகை விட்டு
- ஏகினாலும்
எம் மனதை விட்டு
- அகலவில்லை

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஐயனார் வீதி,
கல்வயல், சாவகச்சேரி

அம்மா, மற்றும் உறவுகள்

## கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்வதற்கான கேள்விகோரல் 2021

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ.இல | பெறுகை இல | கேள்விகள் | உத்தரவாத வைப்பு பணம் |
|---|---|---|---|
| 01 | NP/DGH KOC/2021/G/56 | தனியார் வீட்டினை வாடகைக்கு பெற்றுக் கொள்ளல் | 6,000.00 |

01. முப்பதிற்கு மேற்பட்ட வைத்தியர்கள் தங்கக்கூடியதாகவும், போதிய காற்றோட்டமுள்ள இரண் டிற்கு மேற்பட்ட வைத்தியர்கள் ஒரு அறையில் தங்கக்கூடிய (130 சதுரஅடி) இணைப்பு குளியலறை வசதியுடனான அறைகளுடையதும், வாகன தரிப்பிடம் மற்றும் பொதுவான சமையலறை வசதியுடனான வீடு அல்லது வீடுகள் தேவைக்காக கேள்விகள் கோரப்படுகிறது.

02. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500.00 ஐ செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 23.09.2021 தொடக்கம் 11.10.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

03. மீளளிக்கப்படும் உத்தரவாத வைப்புத்தொகை 6,000.00 செலுத்தப்படாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

04. விலைக்கேள்விகள் 12.10.2021ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக இம்மாவட்ட வைத்தியசாலையின் கணக்கு கிளையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்பிக்கப்பட வேண்டும். சமர்பிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாக திறக்கப்படும்.

05. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329 / 0212284111) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

06. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு : 01.04.1955 இறப்பு : 29.08.2021



எமது பாடசாலையின் ஆசிரியர்
**திருமதி துரைராணி திரவியம்**
அவர்களின் அன்புக் கணவர்

**அமரர் பொன்னன் திரவியம்**
**(மந்துவில் மேற்கு, கொடிகாமம்)**


அவர்கள் 29.08.2021 திகதி இயற்கை எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினரது துயரில் பாடசாலை சமூகத்தினராகிய நாமும் பங்குகொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி!

**ஆசிரியர் நல்லுறவுக் கழகம்**
**மு/அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்**
**யோகபுரம்.**
076 2567603

## கண்ணீர் அஞ்சலி

**அமரர் சின்னத்தம்பி சுப்பிரமணியம்**



எமது ஆலயத்தில் 1978 - 2015 வரை கௌரவ செயலாளராகவும் 1990 முதல் இறுதி ஆலய நிர்வாகியாகவும் செயற்பட்டு ஆலயத்தின் வளர்ச்சிக்கும் அடியவர்களின் வழிபாட் டிற்கும் அர்ப்பணிப்புடன் இறை பணியாற்றி அமரத்துவம் அடைந் திருக்கும் அன்னாரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கைதடி வீரகத்திப்பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

**நம்பிக்கை பொறுப்பாளர் பரிபாலன சபையினர்**
**கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்**
**முதலாய கோயில்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** தாய்வழி உறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு கிடைக்கும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்கள் மூலம் கிடைக்கும் செய்தி மகிழ்ச்சி தரும். வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள்.

**மிதுனம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்யவேண்டி வரும்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணை வழியில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். உடல்நலனில் கவனம் தேவை.

**சிம்மம்:** காரியங்கள் இழுபறியாகும். தந்தை வழியில் ஆதாயம் உண்டு என்றாலும் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணை வழியில் சில பிரச்னைகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வீட்டில் அதிகரிக்கும்

**கன்னி:** முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு மிகவும் உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு எதிர்பாராத பணவரவு ஏற்படும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். அனுசரித்துச் செல்வது நல்லது. புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**மகரம்:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** இன்று எதிலும் சிந்தித்தும் பொறுமையுடனும் செயல்படவேண்டிய நாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

### யாழ்ப்பாணத்தில்...

னாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 17 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 49 பேர் அன்டிஜென் பரிசோதனையில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 16ஆயிரத்து 078 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளனர். (கு-20)

### கொலையாளிகளான...

பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சி. சிறீதரன், போரின் இறுதிக்கட்டத்தில் தமிழ் மக்களை நடுத்தெருவில் கைவிட்டு வெளியேறிய ஐ.நாவும் அதன் சர்வதேச நிறுவனங்களும் இந்த படுகொலைகளுக்கு பொறுப்புக் கூறவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானில் அந்த மக்கள் கதறி அழுகின்ற போது விமானம் விட்டு ஏற்றுகின்றார்கள். சர்வதேச ஊடகங்கள் அதனை வெளியே கொண்டு வருகின்றன. ஆனால் நாங்கள் கொத்துக் கொத்தாக கொல்லப்பட்ட போது சர்வதேசம் மௌனம் காத்தது.

இந்த நாட்டிலே காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்றால் அவர்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்.

ஓமந்தையில் வைத்து இராணுவத்திடம் கண் கண்ட சாட்சியமாக ஒப்படைக்கப்பட்டவர்கள் எங்கே என்ற கேள்விக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதுதான் இந்தநாட்டின் ஜனாதிப்தியின் பதிலா? அப்படியானால் இந்த நாட்டில் கைது செய்யப்பட்டவர்கள் எல்லோரும் கொலை செய்யப்பட்டுவிட்டார்களா? அவர்களுக்கு என்ன நடந்தது? மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது அப்போதிருந்த ஐ.நா. செயலர் பான் கீ மூனிடம் நாங்கள் நீதி வழங்குகிறோம், பொறுப்புக்கூறுகின்றோம் என்று கூறினார். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை.

2008 ஆம் ஆண்டில் கிளிநொச்சியில் இருந்த மக்கள் இதே ஐ.நா., சர்வதேச நிறுவனங்களுக்கு முன்னால் சென்று எங்களை விட்டுப்போகாதீர்கள் என்று கையெடுத்து கும்பிட்டு அழுதார்கள். நீங்கள் போய்விட்டால் எங்களை படுகொலை செய்வார்கள், எங்களை இந்த இலங்கை அரசு கொல்லப் போகின்றது, தயவு செய்து போகாதீர்கள் என்று மன்றாடினார்கள். அப்போது பான் கீ மூன் இருந்தார். ஆனால் எங்களை நடுத்தெருவில் விட்டு சென்ற ஐ.நா.சபையின் ஒவ்வொரு சர்வதேச நிறுவனங்களும் இந்த இனப் படுகொலைக்கு பொறுப்புக்கூற வேண்டும். என்ன நடந்தது என்பதனை ஆராயவேண் டும்.

எமது மக்கள் சர்வதேச ரீதியான நீதியான விசாரணை வேண்டுமெனக் கேட்கிறார்கள் .ஒரு வெளிப்படையான நீதி விசாரணையை கேட்கிறார்கள். ஏனெனில் சர்வதேச நிறுவனங்களை இந்த அரசே வலுக்கட்டாயமாக வெளியேற்றியது. நீங்களும் எங்களை நடுத்தெருவில் விட்டு சென்றீர்கள். நாங்கள் அநாதைகளாக கொல்லப்பட்டோம்.

உள்ளக விசாரணை செய்கின்றோம் என்கிறீர்கள். இதற்கு தமிழர்கள் தயாராகவேண்டும் என்கிறீர்கள். சுட்டவர்கள் நீங்கள். பொஸ்பரஸ் குண்டுகளை வீசி கொலை செய்தவர்கள் நீங்கள். கொத்தணிக் குண்டுகளை வீசிக்கொன்றவர்கள் நீங்கள். 4 இலட்சம் மக்கள் இருக்கும்போது 70 ஆயிரம் பேரே இருப்பதாக கூறி உணவு அனுப்பியவர்கள் நீங்கள். பட்டினியால் கொல்லப்பட்டவர்கள் நாங்கள். குழந்தைகள் கஞ்சிக்காக வரிசையில் நிற்கின்றபோது அவர்களைக் கொன்றது நீங்கள். அனைத்து கொலைகளையும் செய்தது நீங்கள். நீங்களே இந்த கொலைகளை விசாரிப்பது என்றால் அது என்ன நியாயம்? கொலையாளியே தான் செய்த கொலைகளை விசாரிப்பது தான் இந்த உலகின் நீதியா? நாங்கள் கேட்பது ஒரு சுயாதீனமான, நியாயமான பாதிக்கப்பட்ட மக்கள் நம்பக்கூடிய இங்கு நடந்த படுகொலைகளை நிரூபிக்கக்கூடிய நேர்த்தியானதொரு விசாரணையே. ஜனாதிபதி ஐ.நா. செயலருக்கு கூறிய உள்ளக விசாரணை ஒரு நீதியான விசாரணை அல்ல" என்றார். (கு22)

### சாவு...

பேர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 284 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 36 பெண்களும் 30 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இதில் ஆண் ஒருவரும் பெண் ஒருவரும் என இருவர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள். 06 ஆண்கள், 05 பெண்கள் என 11 பேர் 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 53 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 23 ஆண்களும், 30 பெண்களும் அடங்குகின்றனர்.

இதேவேளை, நேற்று ஆயிரத்து 351 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 7 ஆயிரத்து 330 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஆயிரத்து 047 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 34 ஆயிரத்து 140 ஆக அதிகரித்துள்ளது. (கு-22)

### சங்கிலி...

மோட்டர் சைக்கிளில் தப்பியோடினார் என்று குற்றம்சாட்டப்படும் இளைஞன் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம், நேற்று மதியம் இடம்பெற்றது.

வவுனியா, உக்குளாங்குளம் பகுதியில் கடைக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த பெண் ஒருவரைப் பின்தொடர்ந்து பல்சர் மோட்டர் சைக்கிளில் சென்ற இளைஞன், பெண்ணிடமிருந்த இரண்டரைப் பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை இழுத்து அறுத்துக் கொண்டு தப்பியோடினார். அதன்போது அந்தப் பெண், கூக்குரலிட்டுள்ளார். இதனை அவதானித்த அந்தப்பகுதி இளைஞர்கள் குறித்த இளைஞனை கார் ஒன்றில் விரட்டிச் சென்றனர். வவுனியா குற்றத்தடுப்பு பிரிவுப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். திருட்டில் ஈடுபட்ட நபர் வவுனியா, வேப்பங்குளம் சந்தியில் மடக்கப்பட்டு பின்னர் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

திருட்டுக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் மோட்டார் சைக்கிள் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளது. கொள்ளையடிக்கப்பட்ட சங்கிலி துரத்திப் பிடிக்கப்பட்ட நபரிடமிருந்து மீட்கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (கு-18)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரான
**திருமதி சி. வனஜா**
அவர்களின் அன்புக் கணவர்
**திரு. சகாதேவன் சிவகுமார்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும், உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலக நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம், நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணாமல்...

அவர்கள் தமது உறவுகளுக்கு நீதி கோரி ஆயிரத்து 675 ஆவது நாளாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தநிலையில், அவர்கள் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

**முனைப்புடனேயே உள்ளோம்**

எம்முடன் இந்தப் போராட்டத்தில் இணைந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களை இழந்துவிட்ட நிலையிலும், எமக்கு நீதி கிடைக்கும் வரை போராடுவோம் என்ற முனைப்புடன் உள்ளோம். இந்தநிலையில், ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளச்சென்ற இலங்கை ஜனாதிபதி நேற்றுமுன்தினம் ஐ.நா. பொதுச் செயலருடன் விசேட சந்திப்பில் ஈடுபட்டிருந்தார்.

**கவலையுடன் நோக்குகின்றோம்**

அதன்போது, இலங்கையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கு மரணச் சான்றிதழ்களும், இழப்பீடும் வழங்குவது தொடர்பில் கூறியிருந்தார். அத்துடன் உள்ளகப் பிரச்சினைகள் உள்ளகப் பொறிமுறையினூடாகத் தீர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்த செய்திகளைப்பார்த்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் அடைந்தோம்.

எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தில் நேரடியாக சர்வதேச சமூகத்தாலேயே குற்றம் சாட்டப்பட்டு, சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்தும்படி ஐ.நா. மனித உரிமை ஆணையாளரால் பரிந்துரைக்கப்பட்ட சிறிலங்காவின் ஜனாதிபதியை, அதே ஐ.நா. மன்றில் சர்வதேச சமூகம் இன்று வரவேற்று கைலாகு கொடுப்பதை நாம் கவலையுடனேயே உற்றுநோக்குகின்றோம்.

**வேறு வழியின்றி ஐ.நாவை நம்புகின்றோம்**

வேறு வழியின்றி எமது கடைசி நம்பிக்கையாக சர்வதேச நீதிப் பொறிமுறையே இருப்பதால், இந்த இராஜதந்திர சம்பிரதாயங்களையும் தாண்டி சர்வதேச சமூகம் பாதிக்கப்பட்டிருக்கும் எமக்கு நீதியைப் பெற்றுத்தரும் என்று நம்புகின்றோம். இந்த விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை மற்றும் நீதிப்பொறிமுறை தொடர்பாக ஐ.நா. செயலாளர் உட்பட்ட சர்வதேச பிரதிநிதிகள் கேள்வி எழுப்பாமையானது., பாதிக்கப்பட்ட எமக்கு மிகுந்த கவலை அளிக்கின்றது.

**ஜனாதிபதியின் நடத்தை பௌத்த தர்மத்துக்கே இழுக்கு**

2009, மே மாதம் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர் பாதுகாப்புத் தரப்பினரதும், அரசினதும் உறுதிமொழிகளை நம்பி எமது உறவுகளைக் கையளித்தோம். எங்கள் முன்னிலையில் எமது உறவுகள் சரணடைந்தனர். கண்கண்ட சாட்சிகளான நாம், எமது உறவுகளை மீட்பதற்காகப் போராடிக் கொண்டிருக்கின்றோம். ஒரு நாளாவது விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தாலோ அல்லது அவர்களுடன் உறவு பேணியிருந்தாலோ சரணடையுங்கள் அல்லது எம்மிடம் ஒப்படையுங்கள், நாம் புனர்வாழ்வளித்து மீண்டும் உங்களிடம் ஒப்படைப்போம் என்று உறுதியளித்த படையினரதும், அரசினதும் பாதுகாப்புச் செயலர் தற்போது ஜனாதிபதியாக உள்ளார். நாம் எமது உறவுகளை உயிருடனேயே கையளித்தோம்.

எனவே அவரும் எங்கள் உறவுகளை புனர்வாழ்வளித்து எம்மிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். மாறாக உள்நாட்டிலும், ஐ.நா. தலைமையகத்தில் வைத்தும் மரணச் சான்றிதழும், இழப்பீடும் கொடுத்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறுவது புத்த தர்மத்துக்கு ஏற்புடையதா? இந்தக்கூற்றை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு புத்தபெருமானின் போதனைகளை பின்பற்றும் மற்றும் மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் இதைக் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுக்கிறோம்.

**சிறிலங்கா அரசிடம் நீதி கிடைக்காது**

மேலும் உள்ளகப் பொறிமுறையில் எமது பிரச்சினையைத் தீர்ப்பதென்பது கடல் வற்றிக் கருவாடு சாப்பிடுவதற்கு ஒப்பானது. இலங்கையில் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதோ அரிது. அப்படியிருந்தும் அரிதாக ஓரிரு வழக்குகளில், நீதி வழங்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டாலும் ஜனாதிபதிக்கு தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுமன்னிப்பு வழங்கி விடுவார். அத்துடன் அவர்களை மேலும் இது போன்ற கொலைகளைச் செய்யத் தூண்டும் விதத்தில் ஊக்குவிப்பாகப் பதவி உயர்வும் வழங்குவார்கள்- என்றுள்ளது. (த)

## ஜஸ்ரின்...

நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் முடிவுகள் நேற்று வெளியாகின. லிபரல் கட்சி வெற்றிபெற்றாலும், ஜஸ்ரின் ட்ரூடோ எதிர்பார்த்ததைப் போன்று தனிப்பெரும்பான்மை அமையவில்லை. சிறுபான்மைக் கட்சிகளுடன் இணைந்தே ஆட்சியமைக்கும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார். தேர்தல் காலத்துக்கு 2 ஆண்டுகளுக்கு முன்னதாக தனிப்பெரும்பான்மையை இலக்குவைத்து தேர்தலை நடத்திய ஜஸ்ரினின் வியூகம் தோல்வியடைந்ததாகவே கருதப்படுகின்றது. இதனால் கட்சிக்குள் சிறு பூசல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகின்றது. (ம)

## காணாமல் ஆக்கப்பட்டோர்...

மன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன். யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச்சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுத்துவருகின்றேன்" என்று, ஐ.நா. பொதுச் செயலாளருடனான சந்திப்பின்போது இலங்கை ஜனாதிபதி கூறியுள்ளாரென்று அவரது ஊடக அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

எனவே, அவர் இலங்கை திரும்பியவுடனேயே இத்தகைய அறிவிப்பை முதலில் திட்டவட்டமாக, பகிரங்கமாக அறிவிக்கவேண்டும்.

இலங்கை அரசின் தகவல்படி வடக்கு கிழக்கில் 16ஆயிரம் பேர் வரையில் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களில் பெருமளவிலானோர் இலங்கையின் முப்படைகளாலும் பொலிஸாராலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களே. காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு நீதிவேண்டி கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக உறவுகள் போராடிவருகின்றனர்.

ஆனால், தனது ஆட்சிக்காலத்தில் அவர்களை ஒருமுறையேனும் பேச்சுக்கு அழைத்திராத இலங்கை ஜனாதிபதி, உள்ளகப் பொறிமுறையில் பேச்சில் ஈடுபடப்போகின்றேன் என்று அறிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி ஐ.நா. பொதுச்செயலாளரையும் சர்வதேசத்தையும் இதன்மூலம் ஏமாற்ற முற்பட்டுள்ளார் என்பது அம்பலமாகியுள்ளது.

ஆனால், ஐ.நா. பொதுச்செயலாளரோ அல்லது சர்வதேச சமூகமோ காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறியாமலில்லை என்பதை முதலில் இலங்கை ஜனாதிபதி புரிந்துகொள்ளவேண்டும். காணாமலாக்கப்பட்டோர் அனைவரும் கொல்லப்பட்டுவிட்டனர் என்பதை இலங்கை ஜனாதிபதி முதலில் பகிரங்கமாக அறிவிக்கட்டும். அதன்பின்னர் இலங்கை அரச படைகளாலும் பொலிஸாராலும் காணாமலாக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளமை பற்றி நாம் சர்வதேசத்திடம் நீதி கோருவோம். - என்றார். (த-20)

## தமிழர்களை...

றோம். இவ்வாறு வலியுறுத்தினர், காணாமலாக்கப்பட்டவர்களின் வடக்கு கிழக்கு உறவுகளின் சங்கத்தினர்.

குறித்த விடயம் தொடர்பாக வவுனியாவில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிப்பதற்கான திறவுகோல் ரோம் சாசனத்தில்தான் உள்ளதே தவிர, காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகத்திடம் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் சட்டத்தில் உறுப்பினராக்க வேண்டும். அதன்பின்னர் போர்க்குற்றம் செய்தனர் என்று நினைக்கும் எவர் மீதும் சுமந்திரன் வழக்குப்பதிவு செய்யலாம்.

ரோம் சட்டத்தில் இலங்கை கையெழுத்திட்ட பின்னர், எங்கள் ஒரு லட்சத்து 46 ஆயிரம் தமிழர்களைக் கொன்றவர்கள் மீது வழக்குத் தொடுப்பதற்கு நாம் தயாராகலாம். மேலும், 90 ஆயிரம் விதவைகளையும், 50 ஆயிரம் ஆதரவற்றோர் மற்றும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை காணாமற்செய்தவர்களுக்கும் எதிராக நாங்கள் வழக்குத் தாக்கல் செய்வோம்.

தமிழர்களையும் விசாரிக்க வேண்டும் என்று சுமந்திரன் கூறுகிறார். நீதி பெறுவதற்கான சிறந்த வழி அவர்கள் அனைவரையும் விசாரிப்பது என்றும் கூறுகிறார். அனைத்து தரப்பினரையும் விசாரணைக்குக் கொண்டுவருவதன் மூலம் சுமந்திரன், தனது வழக்கு வலுப்பெறும் என்று கூறுகிறார்.

அவர் இங்கே என்ன பேசுகிறார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் குழந்தைகளின் தாய்மார்களான நாங்கள் கூறுகிறோம், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் அவரது நண்பர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர், இலங்கையை ரோம் சட்டத்தில் கையெழுத்திடச் செய்யவேண்டும். ரோம் சட்டத்தில் கையெழுத்திடாமல் நீதி வழங்கப்படாத நிலைமையே உள்ளது. எனவே, இந்த விடயத்தில் மழுப்ப வேண்டாம் என்று சுமந்திரனிடம் கேட்கிறோம். சில செயல்களைச் செய்துகாட்டுங்கள். ரோம் சட்டத்தில் கையெழுத்திடுமாறு இலங்கையைக் கோர உங்களால் முடியாவிட்டால், தயவுசெய்து தமிழர்களை விட்டுவிட்டு உங்கள் வீட்டுக்குத் திரும்புங்கள். சுமந்திரன் இப்பொழுது வெளியேறினால், அவர் எங்களுக்குச் செய்த தீங்குகளை கடவுள் மன்னிப்பார். என்றனர். (த-இ)

## போர்க்குற்ற...

கைப்பாவை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உந்துதலின் ஊடாகவே காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடுகின்ற போராட்டம் தமிழர் தாயகத்தில் நடத்தப்பட்டு வருகின்றது" என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பெரும் வீழ்ச்சியை சந்தித்தது. 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் கூட்டமைப்பின் வாக்கு வங்கி சரிவடைந்தது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சர்வதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் அமைப்புகளுக்கும் இங்கு ஏதாவது ஒரு விடயத்தை விற்பனை செய்யாவிட்டால் அவர்களால் தொடர்ந்தும் இயங்கமுடியாது. வடக்கிலுள்ள மக்கள், காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்பதை அறிவார்கள். போர்க்குற்றம் என்ன என்பதையும் அறிவார்கள். எனினும், அந்த மக்களைப் பட்டியல்படுத்தி வந்து போராட்டம் செய்யும்படியும், இழப்பீட்டை வாங்கித் தருவதாகவும் கூறி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான் அவர்களைப் போராட்டத்தில் அமர்த்தியுள்ளனர்.

இந்தப் போராட்டம் நீதியுடன் தொடர்புடையதாக உள்ளது. தொடர்ந்தும் அதனை அவர்கள் செய்வார்கள். எனவேதான் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளரால் முன்வைக்கப்பட்ட அனைத்து குற்றச்சாட்டுக்களையும் எமது நாடு நிராகரித்தது. மிச்செல் பச்லெட் அம்மையார் அமெரிக்காவின் கைப்பாவை. அமெரிக்க உதவியுடன்தான் அவர் அந்த அரியாசனத்தில் இருக்கின்றார்." என்றார். (த-22)

## அடுத்த...

பெற்றுக்கொள்வதற்கே முற்பதிவு செய்துள்ளோம் என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். அதனடிப்படையில், மூன்றாவது தடுப்பூசியானது எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தின் நடுப்பகுதியில் அல்லது நவம்பர் மாத ஆரம்பத்திலிருந்து நாட்டு மக்களுக்கு வழங்கப்படும் என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

## மின்சாரம்...

உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பேரின்பநாதன் கேசவன் (வயது - 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இரும்புக்கூடு ஒன்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது நேற்று முன்தினம் அவர் மின்சாரத் தாக்குதலுக்கு ஆளானார். உடனடியாக அக்கராயன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் எனினும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அக்கராயன் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலென்சியாவை வென்றது மட்ரிட்

மட்ரிட், செப். 22

லா லிகா தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணி அபார வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் மட்ரிட்டை எதிர்த்து வலென்சியா மோதியது. ஆட்டத்தின் ஆரம்பத்தில் இரண்டு அணிகளும் சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 66ஆவது நிமிடத்தில் வலென்சியாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார் ஹூகோ. நீண்ட நேரம் வலென்சியா ஆதிக்கம் செலுத்தியது. 86ஆவது நிமிடத்தில் வின்சிகஸ் மட்ரிட்டின் கோலைப் பதிவுசெய்தார். பென்சிமா 88ஆவது நிமிடத்தில் கோலைப் பதிவு செய்தார். முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது ரியல் மட்ரிட். (ம)

### ராகுல், அகர்வால் போராட்டம் வீண்

# பஞ்சாப் கிங்ஸை வீழ்த்தி ராஜஸ்தான் திக்திக் வெற்றி

டுபாய், செப். 22

**ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸை வீழ்த்தி த்ரில் வெற்றிபெற்றது ராஜஸ்தான். ஆட்டத்தின் பெரும்பாலான நேரம் பஞ்சாப் ஆதிக்கம் செலுத்திய போதிலும் தியாகி வீசிய இறுதிப் பந்துப்பரிமாற்றம் ஆட்டத்தின் போக்கை அப்படியே தீர்மானித்தது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ராஜஸ்தானின் ஆரம்ப இணை அச்சுறுத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இலக்குச் சரிவில்லாமல் அணி 50 ஓட்டங்களைப் பெற்றது. 36 ஓட்டங்களுடன் வெளியேறினார் லூயிஸ். ஜெய்ஸ்வால் 49 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். மத்திய வரிசையில் லொம்ரொர் 17 பந்துகளில் 43 ஓட்டங்களை விளாசினார். 185 ஓட்டங்களை ராஜஸ்தான் அணி குவித்தது. பந்துவீச்சில் அஷ்டிப் சிங் 5 இலக்குகளையும் சமி 3 இலக்குகளையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப்புக்கு ஆரம்ப வீரர்களான அகர்வால், ராகுல் இணை பலமான அடித்தளத்தை அமைத்தது. இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களை பஞ்சாப் அணி பெற்றது. 49 ஓட்டங்களுடன் ராகுலும்,



67 ஓட்டங்களுடன் அகர்வாலும் ஆட்டமிழந்தாலும் அத்திபாரம் பலமாக அமைந்ததால் பஞ்சாப் அணி வெற்றிபெறும் என்ற நிலையே இருந்தது. இறுதிப் பந்துப்பரிமாற்றத்தில் வெறும் 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலையில் பஞ்சாப் இருந்தது.

ஆனால் வெறும் ஓர் ஓட்டத்தை மட்டுமே தியாகி விட்டுக்கொடுத்து 2 இலக்குகளை வீழ்த்தினார். இதையடுத்து த்ரில் வெற்றி பெற்றது ராஜஸ்தான். (ம)

## இந்தியாவின் துருப்புச்சீட்டு

### வருணுக்கு கோலி புகழாரம்

துபாய், செப். 22

வருண் சக்கரவர்த்தியின் பந்துவீச்சு அற்புதமாக இருந்தது. இந்திய அணிக்காக விளையாடும்போது அவர் முக்கிய துருப்புச் சீட்டாக இருப்பார் என்று கோலி புகழாரம் சூட்டியுள்ளார். ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சேர்ஸை வென்றது கொல்கத்தா. கொல்கத்தாவின் வெற்றிக்கு வருண் சக்கரவர்த்தி முக்கிய காரணமாக இருந்தார். வருண் சக்கரவரத்தியின் பந்துவீச்சு அற்புதமாக இருந்தது. நான் இந்த நேரத்தில் குறிப்பிடுவது என்னவென்றால், இந்திய அணிக்காக ரி20 உலகக்கிண்ணத்துக்காக விளையாடும்போது வருண் சிறப்பாகச் செயற்படுவார். என்றார். (ம)

**வீடு வாடகைக்கு**

ஆவரங்கால் சந்தை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

076 303 4064

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் நிலப்பரப்பு 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 14 அடிப் பாதை யுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

077 814 7389, 077 614 7333

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் (டச்சுறோட்) பகுதியில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

077 814 7389, 077 614 7333

## சம்பியனாவோம்!

### சகல் நம்பிக்கை

துபாய், செப். 22

இந்த வருட ஐ.பி.எல். தொடரில் ஆர்.சி.பி. அணி கிண்ணம் வெல்லும் என்ற நம்பிக்கை உள்ளது என்று தெரிவித்தார் அந்த அணியின் சுழல்பந்து வீச்சாளரான சகல்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீண்டும் ஐ.பி.எல். தொடங்கியுள்ளதால் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த சீசனில் ஆர்.சி.பி. சிறப்பான தொடக்கத்தை கண்டது. எங்களுடைய முதல் கிண்ணத்தை வெல்ல மிகப் பெரிய வாய்ப்பு உள்ளது. இந்த முறை கோப்பையை வெல்லும் அளவுக்கு விராட் கோலி அணியை வழிநடத்திச் செல்வார்.

இந்தியாவுக்காகவும், ஆர்.சி.பி.க்காகவும் விளையாடும்போது விராட் கோலி ஒரே விதமாகவே இருப்பார். இரண்டு அணிகளும் வெற்றிபெற வேண்டும் என்பதில் தீராத வேட்கையோடு இருப்பார் - என்றார். (ம)





## லியோன் கழகத்தை வென்றது பி.எஸ்.ஜி.

பரிஸ், செப். 22

பரிஸ் செயின்ட் ஜேர்மன் (பி.எஸ்.ஜி.) கழகத்துக்கும் லியோன் கழகத்துக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பி.எஸ்.ஜி. அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இரண்டு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தின. பி.எஸ்.ஜி. ஆதிக்கம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த அணிக்கு சிறப்பாகவே ஈடுகொடுத்து விளையாடியது லியோன். கோல்கள் இல்லாமல் முடிந்தது முதல் பாதி.

இரண்டாவது பாதியின் 54ஆவது நிமிடத்தில் லூகாஸ் கோலொன்றைப் பதிவுசெய்தார். அதன் பின்னர் பி.எஸ்.ஜி. அணிக்குப் பெனால்டி வாய்ப்புக் கிடைக்க அதை நெய்மர் கோலாக்கினார். 93ஆவது நிமிடத்தில் லகார்டி கோலொன்றைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது பி.எஸ்.ஜி. (ம)

**தேவை**

மானிப்பாயில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காளர் (கணினி மூலம்) இருபாலாரும் தேவை மற்றும் ஓட்டுனர், விற்பனையாளர் தேவை.

075 632 8578

**விரைவு பொதிகள் சேவை**

உள்நாடு - 24 மணித்தியாலத்திலும்
வெளிநாடு - 72 மணித்தியாலத்திலும்
ஒப்படைக்கப்படும். (நிபந்தனைக்குட்பட்டது)

U.K Over 11Kg - 1000/=

"Pickup Service உண்டு" [வேலையாட்கள் தேவை]

Lanka Cargo Worldwide Express

315, Kasthuriyar Road, Jaffna.

Hotline - 076 2832 397, 070 3750 002.

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், இரண்டாம் ஒழுங்கையில் 20 அடி பாதையுடன் 12 பரப்புக் காணி சட்டபூர்வமாக சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை.

(யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்)

தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00 - மாலை 6.00 மணிவரை).

ஒரு பரப்பின் விலை ஆறு லட்சம்.

076 221 2037, 077 288 0152
077 064 2661, 076 734 1023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.